# சிலம்பொலி

நாவற்குழியூர் நடராசன்

ANANDA P. J.

# சிலம்பொலி

பதினைந் தாண்டாய்ப் பத்திரி கைகளிற்
குதிகொண் டாடிய கவிதைக் குவியல்.

Pandit S. P. Sharma
Secretary

நாவற்குழியூர்
நடராசன்

வரதர் வெளியீடு

முதற்பதிப்பு. 1960.

விற்பனையாளர்:

ஆனந்தா அச்சகம்—புத்தகசாலை

226, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம்.

விலை: ரூபா 1-75

பதிப்புரிமை:

வரதர் வெளியீடு - யாழ்ப்பாணம்

அச்சுப்பதிப்பு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

# பொருளடக்கம்.


1. சிலம்பொலி
2. கவிக்கற்பரசி
3. இதய ராணி
4. தாமரை மங்கை
5. பூங்கொடியாள்
6. மலர்க்குலம்
7. கண்ணைக்கவர்ந்த
ஓர் கார் எழில்
8. தாரகைக் கன்னி
9. இராப்பகல்
10. சுவர்க்கம்
11. படுத்துகிற பார்வை
12. நவீன கோவை
13. எனக்கது முடியாது
14. கட்டழகைத்
தொட்டளையோம்
15. பிரிவாற்றாமை
16. பெரிதும் சிறிதும்
17. தெரியாதா?
18. சிறை
19. காலக் கடல்
20. இந்த மனிதர்கள்
21. வாழ்வு
22. போர்த்தொழில்
புறக்கணிப்போம்
23. ஊர் அறிந்த கேடு
24. போராட்டம்
25. என் மனைவிக்கு
26. என் மகளுக்கு
27. தீபாவளியா?
28. தை பிறந்தது
29. சுழற்சி
30. வெங்காயம்
விலையேறிப்போச்சு
31. பாண்டியனே
எங்குற்றாய்?
32. சீரழிந்து வாழ்வதா?
33. எம் முன்னிருந்த
தெய்வம்
34. கேட்டியோ பாரதீ?
35. கவிதை ஊற்று
36. எங்கள் பெருநிதியம்
37. நடக்காதந்த நயவஞ்
[சம்
38. இல்லையான காவியம்
39. நெஞ்சின் அலைகள்
40. லண்டனிலே
41. 'உவெஸ்மிஸ்ரர்'ப்
பாலத்தே
42. உலகம் உவப்ப
ஒலி பரப்புகையில்
43. பொங்கல்.


———



**உங்களுக்குச் சொல்லுகிறேன்,**

ஒரு வார்த்தை;

என் கவிதை

சங்கத் தமிழல்ல; சாதாரண வழக்குத்
தங்கத் தமிழாலே தயாரிக்கப் பட்டவைதாம்;
எங்கள் இலங்கையில், தென் னிந்தியநாட் டேடுகளில்,
அங்கள் நூற் றெண்பதுவாய்த் திக்விஜயம் செய்தனவே.
அங்கங் கென் சிந்தனையில் அவதரித்த சொற்குவியற்
கிங்கிவ் வெழிலுருவ மீய்ந்திட்ட நண்பர்களே
உங்கட் கிந்நூலை உதவுகிறார்; எந்நன்றி.

— **நாவற்குழியூர் நடராசன்.**

யாழ்ப்பாணம்.
*1-8-1960.*

# முகவுரை.

ஒரு நல்ல கவிதைக்கு இரண்டுவித சிறப்புக்கள் இருக்கவேண்டும்: நல்ல கருத்து இருக்க வேண்டும். ஓசைநயமும் இருக்கவேண்டும்.

பாரதியையும், பாரதிதாசனையும், நாமக்கல் கவிஞரையும் தொடர்ந்து பல நூற்றுக்கணக்கான கவிஞர்கள் தமிழ் நாட்டில் தோன்றி வளர்ந்து வருகிறார்கள். இவர்களில் பலருடைய கவிதைகளிலே வெறும் ஓசைநயம் இருக்கிறது; நல்ல கருத்துக்கள் இல்லை. சிலருடைய கவிதைகளிலே கருத்து இருந்தும் ஓசைநயத்தைக் காண முடிவதில்லை. ஆனால் எங்கள் இலங்கையைப் பொறுத்த மட்டில் புதுயுகக் கவிஞர்களின் தரம் மிகவும் பாராட்டுக்குரியதாக இருக்கிறது. இவர்களின் கவிதைக்கு ஒரு எடுத்துக்காட்டாக நண்பர் நாவற்குழியூர் நடராசன் அவர்களுடைய இக் கவிதைத் தொகுதி மலர்ந்திருக்கிறது.

திரு. நடராசன் அவர்கள் என்னுடைய நீண்ட நாள் நண்பர். இவருடைய கவிதைத் திறத்தாலே என்னைத் தமது நண்பராக்கிக்கொண்டார் என்று சொல்லலாம். இவருடைய கவிதைகளில் காணும் புதிய புதிய கருத்துக்களும், 'மிடுக் மிடுக்' என்ற மிடுக்கான நடையும் என்னை மிகவும் கவர்ந்தன.

'பகைவர் தம்மை நடுநடுங்கப்
பண்ணி வைத்த பாண்டியர்'

என்ற கவிதையை அந்தக்காலத்தில் படிக்குந்தோறும் படிக்குந்தோறும் என்நெஞ்சு விம்மிப் புடைத்ததுண்டு.

இத்தொகுதியிலுள்ள கவிதைகள் எல்லாவற்றையும் ஏற்கெனவே நான் பத்திரிகைகளில் படித்திருக்கிறேன். ஆனாலும் இவை இன்னும் பல முறை படிக்கக் கூடியவை. அதிலும் ஒரு நூலுருவில் வைத்துப்பார்க்கும் போது தனி இன்பம் ஏற்படுகிறது. இந்தக் கவிதைகளைப் படிக்கும்போது நண்பர் நடராசன் அவர்கள் இரட்டை மனிதராக எனக்குத் தோன்றுகிறார்.

ஒருவர் திரு. க். செ. நடராசன்; இலங்கை வானொலித் தமிழ் நிகழ்ச்சி அதிகாரி, உயர்ந்த கம்பீரமான தோற்றமுடையவர்; சாதாரண மனிதரைப்போலக் காதலித்துத் திருமணம் செய்து பிள்ளைகளைப்பெற்று வாழ்க்கை நடத்துபவர்.

மற்றவர் நாவற்குழியூர் நடராசன், கவிஞர்; இவருடைய சிந்தனைகள் புரட்சிகரமானவை.

'பாவலர் கைக்கோடி முறை பட்டு, இனியும் நாணுவதா? வா, அடிவா; வா அருகில்!' என்று கவிதைப் பெண்ணைப் பக்கத்தில் கூப்பிடுவார்.

'புத்திர வாஞ்சைக்காக, புவியினில் அதனால் எய்தும் உத்தம வாழ்க்கைக்காக, 'அவ'ளைப் பத்துப் பத்து மாதங்களாகப் பாழ்படுநிலையிலாழ்த்தி எத்திடும் வாழ்வு வாழ எனக்கது முடியாதப்பா!' என்று சொல்லுவார்.

ஏனென்று கேட்டால்,

'கலைஞர் குலம் அழகு மாணப் பிறந்ததல்லால், மாளப் பிறந்ததுவோ?' என்று கேட்பார்.

'மாந்தர் குல வீதி, இது மண்ணுலகம்' என்று தமது முகவரியைப் போட்டுக் கொண்டு, எங்கேயோ காந்தருவ நாட்டில் விட்டுவந்த தமது மனைவிக்கும், கின்னர வீதியிலிருக்கும் தமது மகளுக்கும் கடிதங்கள் எழுதுவார்.

'காவிய மேன், எதற்காயிங் கெழுதவேண்டும்? கட்டி வைப்போம் ஏட்டினை இக்கணக்கிலேயே' என்று 'இல்லை யான காவிய'மும் பாடுவார்.

இப்படி எத்தனையோ !

இவைகளையெல்லாம் பார்க்கும்போது எம் கண் முன்னே பழகுகின்ற நடராசன் அவர்களுக்குள்ளே இன் னொரு நடராசன் — அசல் கவிஞர் — இருக்கவேண்டு மென்று தோன்றுகிறதல்லவா?

இந்தக் கவிஞர், 'மறுமலர்ச்சி'க்காலத்துக்குப் பிறகு மிக அடங்கி ஒடுங்கி இருந்து, இப்போது மறுபடியும் இடையிடையே தலைதூக்கி எழுகின்ருர். இவர் சோர்ந்துவிடாமல் தமது புத்தம் புதிய கற்பனை வளத் தைத் தமிழுலகுக்குத் தருவாரென்று எதிர்பார்ப்போம்.

—தி. ச. வரதராசன்.

யாழ்ப்பாணம்.
26-8-60.

# சிலம்பொலி.

கேட்கு துமணி ஓசை போலக்
கிண்கி ணீர் என — எனை
வாட்டும் அந்த வனிதை காலின்
வளைசி லம்பொ லி.

அள்ளு தென்றன் நெஞ்சை அச்
சிலம்ப ரற்ற லே — மனம்
கொள்ளு தந்த நூபு ரத்திற்
கோடி ஆசை கள்.

ஆடும் அந்த அமிழ்தி னல்ல
ஆர ணங்க டிக் — கிசை
பாடும் அந்த மங்கை காலிற்
பாத சங்கி லி.

கீதம் பாட வல்ல நல்ல
கிண்கி ணீய துன் — செம்
பாதஞ் சேர என்ன டீநீ
பாக்கி யஞ்செய் தாய்!

யாவன் செய்ய வல்லன் இன்ப
யாழ்த்த மிழ்நங் காய் — இளங்
கோவன் செய்து னக்க ளித்த
நூற்சி லம்பு போல்?

தங்க மேனித் தமிழ ணங்கே
தார ணிக்கெ ழில் — உன்
பொங்கு காலில் மேவும் அந்தப்
பொற்சி லம்ப டீ!

# கவிக் கற்பரசி.

ஆற்றருகே போனேன், பின்
அங்கிருந்து யந்திரங்கள்
வீற்றலறுஞ் சாலைகளின்
வீதிவழிப் போனேன் நான்;
யாற்றரவம் கேட்கவில்லை,
யந்திரச்சில் ஓசையில்லை,
ஏற்றசெவிப் பட்டதெலாம்
என் இதயத் துள்ஒலியே.

ஆண்டொரு மா மரநிழலில்
அன்றிருந்தேன், அந்நிழல்தான்
நீண்டது, பின் நீண்டதுவாய்
நீண்டுமறைந் தேகியதே -
பூண்டமனப் பான்மையொடோர்
பொன்னடியின் மெல் ஒலியை
வேண்டி இருள் சூழ நின்றேன்,
வேறெதுங்கா தேறவில்லை.

"விண்மீன்கள் யாவுந்தம்
வீதிவழி வந்துவிட,
கண், மீன்கள் போலுடையாய்
காலத்தைத் தாழ்த்துவதேன்?
பண்ணோடு தென்றல் எமைப்
பாடிப் பரிசுபெறக்
கண்ணோடு கண்மூடாக்
கருத்தாய்க் கிடக்குதடீ."

என்றுசொலிக் கண்ணயர
எங்கிருந்து வந்தனளோ!
குன்றிநிறத் தாள், அவள்என்
கோதை, கவிக் கற்பரசி;
"அன்றுபல பேசுவதற்
காசைமிகப் பட்டனடீ!
இன்றெனக்குன் முன்னிலையில்
ஏன் எதுவும் தோன்றுதிலை?

"வா, அடிவா, வா, அருகில்
வா, இதென்ன நாணமடீ!
பாவலர்கைக் கோடிமுறை
பட்(டு)இனியும் நாணுவதா?
காவியநற் காவிலுனைக்
கண்டுமனங் கொண்டபினென்
ஆவி உணப் பார்க்குதடீ
அன்றெழுந்த கற்பனைநோய்."

# இதய ராணி.

வண்ணக் கவிதைகளின்
வாசமெனும் என்னுடைய
எண்ண உலகாளும்
என் இதய ராணி, அடீ!
உன்னைப் பிரிந்தேனா...?
ஊடல் எதற்கடிபின்...?
என்னைப் புரந்திடுவாய்,
இந்தா, சற் றென்னைப்பார்!

என் செயினும் என் தேவீ!
என்னோடு நீ ஊடிக்
கண்ணே புலக்காதே,
கணமும் அது சகியேன்;
மண்ணுலக மாந்தரைப் போல்
மருட்டுதற்குச் சொல்லவில்லை;
என்னரசி! உன்னைவிட
இன்னொருத்தி எண்ணுவனோ...?

உன்னோடு நானெய்தும்
உல்லாசப் பேரின்பம்
பொன்னோடு சாகின்ற
பொற்கொடிக ளாலுண்டோ...?
'கண்ணாளன்' 'காமன்' என்பார்,
'காதல்' 'கலி யாணம்' என்பார்,
விண்ணாணம்! மதுமயக்கம்
விடிந்தவுடன் போங்கதைதான்.

மண்ணுலகப் பெண்மொழியை,
மற்றவர்கள் கண் அழகை
எண்ணித் தவங்கிடந்தே
ஏங்குபவர் நாமல்ல;
கண்ணிழந்து மேற்பூச்சிற்
கட்டுண்ணோம்; மண்ணுலகப்
பெண்ணுலகே கேள்! இனிநின்
பின் திரிய யாருமில்லை!

## தாமரை மங்கை.

அருக்கும் எட்டாத வாவியில் – நீர்
ஆடிக் குதிக்கிறாள் தாமரை;
பாருக்கு மேல்நின்று பார்க்கிறான் – அந்தப்
பருவ மங்கையின் காதலன்.

கண்ணைச் சிமிட்டிநட் பூட்டுறாள் – ஒற்றைக்
காலினில் நர்த்தனங் காட்டுறாள்;
மண்ணை மயக்குதக் காதலன் – அவள்
மாண்பினைக் கண்டுசெய் புன்னகை.

தன்னை மறந்துநின் றாடுறாள் – அவன்
தன்திசை போகவும் ஊடுறாள்;
மின்னைப் பழித்திடும் மேனியாள் – இதழ்
மெல்லக் குவிப்பதும் கொஞ்சவோ?

யாரைநீ கொஞ்சமுன் சாய்கிறாய் – அடீ
யாருமில் லாதஇவ் வேளையில்?
ஊரைநீ ஒண்நகை காட்டிஏன் – வெறும்
உன்மத்த மாக்கிறாய் ஊர்வசீ?

மானடி உன்னெடு நோக்குகள் – அதில்
மருண்டு போகுதென் வாக்குகள்,
ஏனடி இத்தனை நாட்டியம்? – இதில்
எத்தனை பேரைநீ வாட்டுறாய்?

# பூங்கொடியாள்.

காத்துக் கிடக்கிற காதலி மார்உளம்
கன்றிப் பசப்புறு மேனியென — இங்கு
பூத்துக் கிடக்கிற பீர்க்குக ளேதொலை
போய்உம் உடல்பசப் பித்தவர்ஆர்?

ஈங்கய லேபடர்ந் தேங்கி மனமுடைந்
தின்நிறம் யாவும் இழந்திருக்கும் — பீர்க்குப்
பூங்கொடி யேஉனைப் போலப் பசந்தலர்
பூத்தும் ஒருபேதை போகுவளோ?

யாரைநீ தேடிப் படருகி றாய்உன்றன்
யௌவன மேனி பசந்திடவே? — முட்
காரையின் காடுகள் சுற்றிப் படர்ந்தும் உன்
காதலனை இன்னும் கண்டிலையோ?

எங்கடி போயினன் உன்கண வன்? உனை
ஏமாற்றிப் போயின னோ? உனக்கே — ஒளிர்
தங்கமும் வெள்ளியும் தந்திட வோ? கல்வித்
தர்க்கங்கள் செய்து மகிழ்ந்திடவோ?

என்றுனைக் கூடி இருந்தான டீஅவன்
எங்குனை விட்டுப் பிரிந்தானடீ — பகை
வென்றுனைக் கூடிக் களித்திட வேபோன
வில்விற லோன் இன்னும் வந்திலனோ?

'முல்லை இளநகை பூக்கையி லே, முகில்
முற்றும் கருத்தரித் தார்க்கையிலே, – முளை
நெல்லை வயலிடைச் சேர்க்கையி லேவினை
நீங்கி வருவன்' என் றோதிலனோ?

பின்னர் மயிலினம் ஆடுவ தை மட்டும்
பேதைநீ கண்(டு), 'அவர் வந்திலரே' – என்று
முன்னை இருந்தஉன் முத்தெழில் போய், உடல்
முற்றும் பசப்பூரச் சோருவதேன்?

தாளுனக் கொன்றெனத் தேய்ந்ததெ லாம்பிரிந்
தான்எண்ணி நீபடர்ந் தோ? அவனும் – போன
நாளெண்ணி யோவிரல் தேய்ந்ததடீ? சென்ற
நாடெண்ணி யோமனம் மாய்ந்ததடீ?

சோலையு ளேபடர் சுந்தரி யே உன்றன்
சோர்வது வும்ஒரு சோபையடீ – இன்று
காலையில் இங்குனைக் கண்டபின் னேஉளம்
கவலையும் வேணுமென் றெண்ணுதடீ!

# மலர்க் குலம்.

எத்தனையோ செம்புலவோர்
எத்தனையோ சொல்லினுமென்?
எத்தனையோ சொல்லுவதற்
கின்னும் இருக்குதடா!
எத்தனைநாள் நான்மலரை
எத்தனையாய்ப் பார்த்துவிட்டேன்;
எத்தனையோ பார்க்கஅதில்
இன்னும் இருக்கிறதே!

மெத்தஎழில் மேவுகிற
மேலாம் மலர்க்குலங்கள்
இத்தரணிக் கில்லையெனில்
எங்கே அழகிருக்கும்?
அத்தகைஏர் கொண்டகத்தை
அள்ளிவிடும் அக்குலத்துக்
கித்தகைய சிறுவாழ்வோ?
ஏன், இதுவும் எம்வினையோ?

தாமரையைத் தையலரின்
தண்முகத்துக் கொப்பெனில்அத்
தாமரைதான் வாடாதோ?
தாழ்குழலார் கண்களினைக்
காமருசேர் காவியெனக்,
காந்தளினைக் கையெனவே
நாமுரைக்கின் நாணமுற்றோர்
நாளிலவை வாடாவோ?

முல்லைகளே, உங்கொடியின்
முகைகளைநாம் பல்லென்றால்
இல்லையென வாய்திறந்தெம்
ஏழ்மையினை நகைக்கின்றீர்;
எல்லையறு பரம்பொருளே!
இயற்கையது சக்திகளே!
ஒல்லையிலே உம்மகிமை
உணர்த்துவதற் கோஇவையும்?

# கண்ணைக்கவர்ந்த ஓர் கார் எழில்.

பாரில் வசந்தம் படர்கையில், — மலர்ப்
பந்தரி னுள்ளிருந் தின்மொழீ!
ஆரைநீ கூவி அழைக்கிருய் — உன்
அன்பொழு குங்குர லால்அடீ?

கூடக் குறித்த இடத்தினில், — அடி
கோயில மே வந்துன் காதலன்
தேடித் திரிவனென் றெண்ணியோ — உன்றன்
தீங்குர லாற்குறி செய்கிருய்?

மானம் பெரிதல உன்றனுக் — கொரு
மாட்சி பெரிதல, உன் இசைக்
கானம் பெரிதெனக் காட்ட நீ — தரும்
காதற் கவிதைக ளோ அவை?

தேனும் புளிக்கும் உன் தீங்கவிக் — கிணை
தேசத்தி லேதடி சொல்லுவேன்?
நானும் பறந்துவந் துன்னெடென் — வாழ்
நாளைக் கழித்திட எண்ணுறேன்.

கன்னங் கரியஉன் கார்எழில் — என்
கண்ணைக் கவர்ந்ததெவ் வாறடீ?
வன்னங் கரியதொன் ருயினும், — உன்
வார்த்தை — எனக்கது போதுமே.

வாழ்வில் வசந்தமொன் றுண்டடி — அதில்
வாழும் மகிழ் மரக் காவினின்
சூழ்வில் இருந்துனைப் போலவே — கவி
சொல்லிக் களித்திருப் பேனடீ.

# தாரகை க்கன்னி.

பண்ணைப் பழிக்கும் ஓர் பார்வையால், – இருள்
மண்டிக் கிடக்கின்ற போதிலே,
என்னை மருட்டிடக் கண்களை – இமை
வெட்டிச் சிமிட்டுற கன்னியே!

என்வழி யான்செலும் வேளையில் – எனை
ஏறிட்டுப் பார்த்திவ் இரவினில்,
உன்வழிக் காக்கிட, மாடியில் – நின்றும்
உற்றுற்றுப் பார்க்கிற மங்கையே!

சொல்லடி ஏன் உனக் கிவ்விதக் – கொடும்
சூழ்ச்சிகள்? உன்றனுக் கேற்குமோ?
நில்லடி, என்னுளம் தொட்டபின் – ஓடும்
நீசத் தனங்களேன் செய்கிருய்?

உன்றனைப் பின்தொடர்ந் தேகிட – வழி
ஒன்றையும் காண்கிலன், என்செய?
என்றனை விட்டுநீ போவதும் – அடி
ஏன்? எவ ரேவரு கின்றனர்?

நாளை இரவினில் வந்துனை – இங்கு
நாடி யிருப்பன்என் நாயகீ!
வேளை தவருமல் வந்திடு – நெஞ்சு
வேகும் தறுவாயிற் போகிருய்!

**கா**மன் எழில்என ஓர்கடைக்
கண்ணிற் கதிர்ஒளி பட்டதும்,
பூமகள் பார்க்கத் திரும்பினள்,
புன்மை இருட்கணம் போயின.

கண்டனள், காலைக் கதிரவன்
காந்தியும் தண்மையும் நெஞ்சினைக்
கொண்டன; கொண்டிட, வேந்தனைக்
கூடக் குறுகி நடந்தனள்.

பொங்கின பூம்பொழில் இன்பெலாம்,
பூரித் தனமலைக் கொங்கைகள்,
அங்கங்கள் யாவும் மலர்ந்தவள்
ஆசைப் பெருக்கினைக் காட்டின.

பார்த்துப் பருகினன் பானுவும்
பார்மகள் மேனி வனப்பெலாம்;
வேர்த்துக் கிடந்தனள் பூமகள்
வேட்கைமீ தூர்ந்திடு வெம்மையால்.

செங்கரம் ஆயிரம் நீட்டினன்
சேர்த்து மகிழ்ந்திடக் காதலன்;
மங்கையும் தாவிக் குதித்தனள்,
மாரனுங் கண்டு களித்தனன்.

கூடித் திளைத்தனர், காதலன்
கோலக் குறும்புகள் செய்திட,
ஊடித் திரும்பினள் காதலி
ஓர்புறம்; எங்கும் இருண்டது

தாரகைச் சேடியர் வந்தனர்,
தண்மதித் தோழியும் வந்(து)'அடீ!
காரணம் என்' எனக் காரிகை
கண்பனி நீரை உகுத்திஞள்.

'ஏதடி, ஏதடி, உன்றனுக்
கென்ன நிகழ்ந்ததென் றெங்களுக்
கோதடி' என்றனர்; ஓதிலள்
உற்ற குறிப்பில் உணர்ந்தனர்.

'காதலன் ஓர்பிழை செய்திடில்
காதலி நீபொறுத் தாள்வது
தாழ்வல, இன்பந் தருமது
தான்'என ஊடல் திருத்திஞர்.

கண்ணின் கடையினில் நோக்கிஞள்
காதலன் புன்னகை பூத்தெழில்
வண்ணப் பரிசுடன் வந்தனன்
வாட்டம் ஒழிந்தனள் பார்மகள்.

கண்டனர் கார்குழற் சேடியர்,
கண்ணைச் சிமிட்டிஓர் சூழ்ச்சிமேற்
கொண்டனர்; கொண்டு, 'குழற்கலர்
கொய்து வருவம்'என் ருேடினர்.

சாலுந் தனிமையிற் காதலர்
சந்தித் தனர், ஒளி சான்றது!
நாளும் இவ் வாறு நிகழ்ந்திட
நாமும் இராப்பகல் என்கிருேம்!

# சுவர்க்கம்.

காவல்செயும் வீரரெனக் கோட்டை யெல்லாம்
கண்கள்திறந் தேஇமையா கரையில் நிற்க,
மாவலிகங் காநதியும் மகிழ்ந்து பாடி
மங்கைநடம் பயில்வதெனச் சுழன்று சாடி,
பாவல்புடற் கொடிவகையின் பந்தரோடே
பழவகையுந் தினைமணியும் குலுங்க, ஊடே
போவதெலாம் பார்த்துமனம் பொங்கு கின்ற
போதடிநீ இங்கிலையே புதுமை கூட்ட!

காவிமலர்க் கண்களொடிக் கான்உ லாவும்
கன்னியர்பூக் கொய்திடநற் தேன்கு லாவும்;
தாவிவளர்ந் தோங்குமரக் கிளைகள் ஆர்க்கும்,
தகர்ந்தபழங் கோபுரங்கள் தவழ்ந்து பார்க்கும்;
தூவிநிகர் காட்சிமனத் தூய்மை யூட்டும்,
துளபமலர்க் கரைகளெலாம் வதுவை கூட்டும்,
கூவிவருங் குயில்கிளியுன் கோலங் காட்டும்,
குறையுளதொன் றடி, அதுஇங் கென்னை வாட்டும்!

ஈங்குளபன் மலர்களதெல் லாம்எ டுத்தும்
இளைப்புறவே என்னிருகை யால்தொ டுத்தும்
பாங்குடனே அனுப்புகிறேன் அடிநீசூடிப்
பார்; அதுன்கைக் கிடைக்கும்போ திருக்கும்வாடி!
ஆங்கதைநீ ஏற்றிடு பொன் அணிகொ டுத்தும்;
அவையுனதன் பினைநிதமென் பாறப டுத்தும்;
கோங்குகள்நன் றேங்கிவளம் தேங்கு மிங்கே,
கூடஇருந் தாயெனிலச் சுவர்க்க மெங்கே?

## படுத்துகிற பார்வை.

**நா**ன்பார்க்கத் தான்பாராள், நான்பாரா விட்டதன்பின்
தான்பார்த்து வான்பார்க்கும்; நான்பார்க்கில் – [தான்பார்த்து
வான்பார்த்து மீன்பார்த்து வையத் துளவெல்லாம்
தான்பார்க்கு மென்னைத் தவிர்த்து.

மான்பார்த்த நோக்கென்னைத் தான்பாரா விட்டதன்பின்
நான்பார்க்கும் போதென்னைத் தான்பார்க்கில் – [ஏன்பார்த்தாய்
என்றென்னைத் தின்ன எனப்பார்க்கும், அங்கிலேயே
வென்றென்னைத் தோற்க விடும்.

நான்பாரா விட்டாற்பின் தான்பாராள் போற்பார்த்தும்
ஏன்பாராய் என்றே எனைஈர்க்கும் – நான்பார்த்தால்
தான்பாராள் என்றவளை நான்பாரேன் போற்பார்க்கத்
தேன்பாயு முள்ளத் திருந்து.

பார்த்தாலுந் துன்பம், படுத்துகிற பார்வையினை
நீத்தாலும் ஆங்கே நெடுந்துன்பம் – பார்த்தால்
படுத்தும் அவளை, அதுஇன்றேல் என்னை
அடுத்துக் கெடுக்கும் அது.

## காட்சி.

பாயும் புலியெனத் தாவணிச் சேலைமுன் பாய்ந்தழுத்த
மாயும் இருமுக மானென விம்முமோர் கச்சணிந்தே
ஏயும் இளங்கொடி ஒன்று நவீனன் வரைமுகிலுள்
தோயும் இளம்பிறை யோடெழில் சூடித் துவள்கிறதே!

## காதல்.

ஆகா! அனநடை மாதிவள்; யாதிவள் ஊர்பெயரோ...?
பாகா யுருகிடு மென்னுளம் இந்தப் பனிமதிமுன்;
மேகா யிரமென வந்த நவீனன் மலையினிடைச்
சாகா மருந்திது வே, பிறி தேதிது சத்தியமே.

## கடிதம்.

என்னுயி ரே! திரு வே! மதி ஏய்எழில் ஆணரங்கே!
மன்னுயிர் வாழ மருந்துத வும்மலை யென்றுநவீ-
னன்னுயி ரான மலைக்குல கேற்றும் நயனுரைகள்
என்னுயிர் வாழ மருந்துனை ஈன்றத ஞலியைபே.

## பதில்

துள்ளுவ தென்னுயிர் ஆரறி வார்? சில தோகையர்கள்
எள்ளுவ தாக நினைந்தெனை உம்பெய ரோடுரைக்க;
அள்ளுவ தாக அமைந்ததென் அன்பெனில் என்னகத்தே
கொள்ளுவ தள்ளி நவீனன் வரையெனக் கொட்டுவனே!

## சந்திப்பு

மாதவம் எத்தனை செய்தன ளோஇள மார்பினைவிண்
டேதவர் ஞானமெ னுவளர் நங்கைப யோதரத்தை
ஆதவ னும்மணு காத நவீன னடர்வரையின்
மீதவ ளாம்பல் இதழுடன் மேவிச் சுகித்திடவே!

## உடன்போக்கு.

தேமது ரத்தமிழ் நின்று விளங்கிய தேசமதாம்
மாமது ரைப்பதி யேகுவம்; இங்கு நவீனருளம்
நீமது நானளி யாகிநு கர்ந்திடு தற்கியையார்;
பூமது வையளி யுண்பதி லின்பம் பொலிதவரே!

## பிரிவு.

மன்றலில் நின்றது போலிள மாதர்கள் வாழ்வினிலேன்
நின்றிலர்? கால நடந்திட எத்தனை நிந்தனைகள்!
கொன்றிடல் போலெதிர் பேசிக் கொழுநரை [''ஏவல்கள்செய்''
என்றலில் இன்னல்கள் ஏ(து)? இவ ளோடெமக் [கேனுறவே!

# எனக்கு அது முடியாது.

மலரதன் அழகுக் காக,
மணவினை மாலைக் காகப்
பலர் அதைப் புகழ்தற்காகப்
பரிமள மிகுதற் காக,
அலரதைப் பறித்தென் அற்ப
ஆசையின் பலிய தாக்க
குலமலர் வாட்டம், முள்ளின்
குத்தல்கள் தாங்க மாட்டேன்!

செவ்விதழ் முத்துக் காகச்
சிற்றிடை முயக்கிற் காகத்
திவ்விய மென்று மாந்தர்
செப்பிடு வாழ்வுக் காகச்
செவ்வரிக் கண்ணாள் தன்னைச்
செகத்தினிற் பிரியே னென்றிங்
கெவ்விதம் இசைப்பேன் பொய்மை:
எனக்கது முடியா தப்பா!

புத்திர வாஞ்சைக் காகப்
புவியினில் அதனை லெய்தும்
உத்தம வாழ்வுக் காக,
உருக்குலைத் தவளைப் பத்துப்
பத்துமா தங்க ளாகப்
பாழ்படு நிலையி லாழ்த்தி,
எத்திடு வாழ்வு வாழ,
எனக்கது முடியா தப்பா!

# கட்டழகைத் தொட்டனேயோம்.

காலையிளஞ் சூரியனைக்
கண்டு நகைக் கின்ற எழில்
மாலை யெழுஞ் சந்திரனை
மாறுகொண்ட செவ்வதனம்...

முத்திருந்து பொன் நகைமேல்
முறுவல் புரிவதுவும்,
தத்தி இதழ்ச் செம்பவளம்
தன்னுள் அவை தோன்றுவதும்,

பட்டுடையும் கட்டழகும்
பாயுமிரு நீள் விழியும்
கொட்டு மழைக் கூந்தலும், அக்
கோதை வனப் பேற்றிவிடும்.

கொல்லையினில் முல்லை மலர்
கொய்து குழற் பெய்தவளும்
முல்லையழ குக்கழகை
முற்றும் அளிக்கையிலே...

சொல்லரிய சோபையினிற்
சொக்கப் படைத்ததனல்,
எல்லை கடந் தென்னிருகண்
ஏகி லயித்தனவே...

கால்கிளைய, மேல் வளைய,
கைதானை தான் அளைய,
சேல் விழிகள் என் ஆகம்
சென்றதனு ளேநுழைய...

நின்றாள், இளமங்கை;
நெடுகத் தெரிந்தவள் தான்;
என்றால் அவள் அழகின்
றின்னல் புரிகிறதேன்...?

பெண்ணின் குலத்தினிலே
பேரழகி யல்ல; எனின்
கண்ணின் அசைவினிலென்
எண்ணம் அசைகிறதே!

வண்ணம் சிவப்பில்லை;
வாய் பவளம் போலுமில்லை;
எண்ணம் அதையதுவாய்
எண்ணிக் களிக்கிறதே!

பள்ளிப் பருவத்திற்
பலகாலுங் கண்டிருந்தும்,
துள்ளிக் குதிக்குதுளம்
தோகையவள் சாயலிலே!

ஏதோ நலன் ஒன்றால்
எடுபட்டுப் போக உளம்,
தீதேதுந் தேராத
சித்தப் பிரமையிதோ...?

காரிகையர் காட்சியில் ஓர்
காரணமும் இல்லாமற்
பாரிளைஞர் சொக்குகிற
பருவப் பிசகோதான்...?

அண்டிப் பழகுவதால்
அல்லுருவி லும் எழிலைக்
கண்டு களிக்கின்ற
காதல் இதுதானோ?

பல்லைப் பிறை நுதலைப்
பார் என்று காட்டினளா?
இல்லை; குழைந்திட்டாள்:
ஏன், அழகு தான் அதுவும்!

அழகேதான் அக்குழைவும்,
அழகேதான் அவ்வளைவும்
அழகேதான்; அவ்வழகை
அகப்படுத்தி விட்டாலோ!

அழகை அகப்படுத்தி
அதைப் பருக லாமோ நாம்?
அழகை அகப்படுத்தின்
அழகின்மை காட்டிடுமே!

இனிமை யுடைமையிலே,
எய்தற் கருமையிலே,
புனித மிகுதியிலே
பொங்கும் அழகுணர்வு...

ஆதலினல் நாமழகை
அகப்படுத்த மாட்டோம், போ;
காதலினல் ஆனலும்
கட்டழகைத் தொட்டனையோம்.

தூரத் திருந் தெழிலைத்
துய்த்துப் பருகி உளம்
ஆரச் சுவைப்பதலால்,
அண்டி அழகின்மை,

காணச் சகிப்போமோ ?
கலைஞர் குலம் அழகு
மாணப் பிறந்ததலால்,
மாளப் பிறந்ததுவோ.. ?

# பிரிவாற்றுமை.

( "பொருள் வயிற் பிரிவேன்" என்ற தலைமகனுக்குத்
தோழி சொல்லியது )

முன்னெல்லாம் என்னோடு முறைபேசி, "உன்தோழி
கண்ணல்லோ அவளென்றன் காதல்லோ" எனவுரைத்த
பொய்யெல்லாம் அறியாமற் பேனேனே! இழிமதியால்
மெய்யெல்லோ "பிரியேன்" என் றுரைத்தமொழி
[யெனவிருக்க;

நெடுமூங்கிற் றேள்வற்றி, நிரையிட்ட வளைவீழப்
படுமூங்கில் எனவாகிப் பாடெய்த அவள்நீத்துப்
புகைவண்டி பொறிதள்ள, மழையின்றி வறள்கின்ற
வகைகொண்ட தருப்பற்றி வண்டிக்கு நெருப்புவைக்கும்
வழிதாண்டி, நிலையாத பொருள்வேண்டி நீப்பேனென்
றளியின்றி உரைசெய்தோய்! அமர்ந்திதைக் கேளினி:

அங்குபோய் அன்னியர்க் கடிமைபோ லேயிருந்
தெங்ஙனம் வளர்பொருள் ஈட்டலாம்? எனவன்றே,
கொங்குதார்ப் பெரும! நின் 'கொப்பர்' நற் கமஞ்செய்து
இங்ஙனம் பெரும்பொருள் எமக்கீட்டி வைத்தனர்!

பிறரேவ மொழிகேட்டு வழிபட்டு வாழ்தலின்
பிறவேது கடையென்று, பேணிநுந் தாதையர்,
மறமேது மறியாத திறமான முறைகோலி
அறமான பொருள்தேடி அழியாது வைத்தனர்.

தமதிட மகன்றுபோய்த் தனியிருந் துண்டலின்
கமழ்புகை யிலைகட்டிக் கண்டிக்குக் கடைக்கனுப்பும்
எமர்புகழ் வியாபாரம் இனிதினி ததனுற்றேடி
நமர்இந்த நாட்டினை வளமையாய் வைத்தனர்.

அதனுல்......

'பொருள் பொருள்' என்றினிப் போதலும் வேண்டா;
பொருளெங்கள் நாட்டிலே போதுமட் டுண்டு;
நீருண்டு, வித்துண்டு, நிலமுமுண் டியக்
காருண்டு; பேரில்லைக் காசினைக் கொள்ள;
மருளுற்றே அங்கோடி மாய்வதில், இங்கெம்
பொருள்கொண்டு வாணிபம் போற்றுதல் தீதோ?
சிலகற்ற சிற்றறி வோர்போல்,
பலகற்றும் அடிமையாய்ப் பாழ்படல் நன்றே?

# பெரிதும் சிறிதும்.

**கா**ற்ற டிக்குது மழை வருகுது,
கனத்த மரங்கள் சுழலுது;
நேற்றெ முந்தஊர் சிறிய பூண்டு
நீண்டு நிமிர்ந்து நிற்குது!

அலைகு முறுது, புயல் உ றுமுதிங்
காழ மான கடலெலாம்
நிலைத ளருது; சிறிய குட்டை
நிச்சத் தமாய் நிற்குது!

உள்ளம் நடுங்க வெள்ளம் போடு (து)
ஊரில் முதிஞர் கலங்குருர்;
துள்ளிச் சிறுவர் வெள்ளம் வழியே
தோணி விட்டுத் திரிகிருர்!

கூடுகட்டி முட்டையிடும்
குருவிக் குலங்களுக்கு
வீடுகட்டி வாழும் அந்த
வித்தை தெரியாதா?

வீடுகட்டி வாழ்ந்தொழுங்கு
விதிவகுத்திங் கொற்றுமையாய்ப்
பாடுபடும் எறும்புகட்குப்
'பறைய'த் தெரியாதா ?

காலக் குறிப்பறிந்து
காதல் செயும் விலங்குகட்கு,
சீலக் குடித்தனங்கள்
செய்யத் தெரியாதா?

தெரியாமல் என்ன? எலாம்
தெரியுந்தான்; ஆனாலோ
புரியாதாம் அவ்வவற்றின்
போக்கிம் மனிதருக்கு!

வாழப் பிறந்த அந்த
வர்க்க உயிர்க்குலங்கள்
தாழும் வகையொழிக்கத்
தவிர்த்ததிவை, வேறென்ன?

# சிறை.

குறையொன்றும் புரியாமுன்,
குணமொன்றும் அறியாமற்
சிறைசெய்தா ளேஎன்னைப்
பிறைபத்தாய் அன்னை!

தப்பிப் பிழைத்ததில்
தத்தித் திரிந்தேன்,
அப்பிக்கொண் டான்ஏதோ
செப்பிக் கொடுப்போன்!

பத்தெட்டாய் வருஷங்கள்
பறந்தோடிப் போக,
வித்திட்ட தந்தைஎன்
விளைவெதிர் பார்த்து,

கொத்தடி மைத்தொழில்
கோதில்லை என்று
சித்தங்கொண் டென்னை அச்
சிறைவிடுத் திட்டான்!

மீளாமல் இங்கிவர்க்
காளாகி மாள,
வாளான கண்கொண்ட
வனிதை ஒருத்தி,

பாரான என்மனப்
பாறை உளக்கி,
கூறுமற் கொள்ளாமற்
கொண்டாள் சிறைக்கு!

காரண காரியம்
ஏதுமே யின்றி,
கார சாரவி
சாரணை யின்றி,

சிறைசெய்யும் முறையென்ன?
குறையென்ன செய்தேன்?
அறை! என்று கேட்டும் என்?
உரையொன்று சொல்லார்!

நாற்சுவர்க் குட்சிறைப்
பட்டுள கைதி
போற்சிறை மீண்டுநான்
போக அவாவி,

போயினன் எங்கெங்கோ
புத்திடங் கட்கே;
ஆயின் என்? அங்கும்
அதேசிறைக் கூடம்!

ஏகிட ஏகிட
எங்கும் அதுவாய்ப்
போகிடப் போகிடப்
போன அப் பாதை,

மீண்டதல் லாமலோர்
மீட்சிய தில்லை!
கூண்டது வாய்உல
கும்சிறை என்னை,

கொண்டது, கொண்டது,
கொண்டதே! என்று
கண்டது சிந்தை
கலங்கிட, இந்த

விந்தைச் சிறைகளின்
வேரிட மான
கந்தை உடற்சிறைக்
கட்டுட் கிடந்தேன்.

# காலக் கடல்.

காலக் கடல் அலையில் – வாழ்வாம்
கலமும் எத்தனையோ
கோலக் குறியுடனே – எதையோ
கொண்டு பறக்குதடா!

நீலக் கடலுமல – கலங்கள்
நிற்கக் கரையுமிலை!
ஆலக் கடலதடா! – அதனுள்
அமுதும் பொங்குமடா!

அந்த அமிழ்தினையே – கலங்கள்
அள்ளச் செல்கையிலே,
கொந்த ளிக்குமடா! – கடல்தான்
கொடுஞ் சுழிப்புடனே!

வீசிடும் அங்கெழுபல் – கோடி
விந்தைப் புயல்களினால்,
பாசி மறைத்துவிட – கலங்கள்
பாறையில் மோதுமடா!

தத்த ளிப்பதுந்தான் – சில, பின்
தப்பிப் போவதுந்தான்;
இத்த ரணியிலே – இதுதான்
எங்கள் வாழ்க்கையடா!

# இந்த மனிதர்கள்.

இந்த மனிதர்களின் — போக்கை
இங்கு நினைந்து விட்டால்,
சிந்தை தளருதடா! — வாழ்க்கை
'சீ' யென்று போகுதடா!

வந்த விதமறியார் — இங்கு
வாழும் முறைகளென
விந்தை விதிவகுத்தே — ஏதோ
வெட்டி விழுத்துகிறார்!

"வேண்டும் விடுதலை" யென் — றிங்கே
வேதனை கொள்ளுகிறார்;
கூண்டிற் குருவிகளை —ஏனோ
கூட்டிவைத் தாட்டுகிறார்?

அந்த உலகமென்றும் — அதற்கும்
அப்பாலு மிப்பாலுமென்
றிந்த மனிதருளே — இன்னும்
எத்தனை பேச்சிருக்கு!

நாளை வெறுப்பதனை — இன்று
நாடிப் பறந்துலகில்
மூளை குழம்புகிறார் — இந்த
மூட மனிதரெலாம்.

ஓடித் திரிந்துழன்று – வாழ்வாம்
ஓடத்திற் போகையிலே,
தேடித் திரிந்ததனைக் – காலன்
'திக்' கென ஆழ்த்துகிறான்.

பின்னென ஆவதென்று – பலவாய்ப்
பேசிப் பிதற்றுகிறார்;
என், இதை எண்ணுவதால்? – இவர்க்கிதில்
ஏதும் தெரிந்திடுமோ?

# வாழ்வு.

மரம் பழுத் துதவ நன்கு
மாந்திய கிளிகள் பாடி
உரந்தனும் உதவா தந்த
உயர்மரக் கிளையை விட்டுப்
பறந்திடும்; தாங்கள் இட்ட
பசளையாற் பழுத்த துண்ணு,
துறந்திடும் விலங்கி னங்கள்
துய்க்கவொர் பழமி லாமல்.

பெடையினை மயில்க லைக்கப்
பின்னெரு நரிது ரத்தப்
"படைபடை" யென்று பாம்பு
பயந்துமுன் நடுங்கி யோடக்
'கெடுபிடி' யென்று மான்கள்
கிளர்ச்சிகொண் டோடி, முன்னுக்
கடுபுலி கண்டு யாவும்
கலைத்ததைக் கலைத்து மீழும்.

* * *

மாடியில் மதுவ ருந்தி
மாதர்கள் நடுவி ருந்து
கூடியுல் லாச மாகக்
குலவுவர்; வேளை பார்த்துத்
தேடிவந் துண்டி சேரத்
தின்றுதின் றுலகி லென்ன
கேடிழைத் தாலும், சட்டம்
கிட்டியு மவரைப் பாரா.

வீதிகள் கூட்டி நாடு
வேண்டிய பணிகள் செய்யும்
சாதிகள் தாழ, வேறோர்
சாதியர் வாழு கின்ற
நீதிகள் உடைய திந்த
நீள்நிலம்; ஈங்கு வேறு
சூதிகழ் கின்றார்; இந்தச்
சூட்சுமம் அறியோம் அப்பா!

# போர்த்தொழில் புறக்கணிப்போம்.

ஆதியின் பேரால் வேத
ஆகம புராண நூல்கள்
ஓதி, அவ் விதிக டந்தோர்க்
கொருபெரு நரக மென்ற
நீதியை ஊட்டி, வேறு
நீசர்கள் உயர்ந்தோர் என்ற
சாதிகள் நாட்டி, நூறு
சமயமு முலகிற் கூட்டி,

மேதினி மக்கள் தம்மை
மீட்பவர் அவர்தாம் என்று
காதினி லுபதே சித்துக்
கருத்தினை மயக்கி, முன்னைப்
போதினி லுலகைத் தங்கள்
போக்கினி லடக்கி யாண்ட
சாதியி லுயர்ந்தோர் கையிற்
சஞ்சரித் திருந்த தானை.

சொல்லினுல் உலகை யாண்ட
சூழ்ச்சிகள் ஒழிந்து போக,
வில்லினுல் உலகை யாளும்
வேளையும் உதித்த தாங்கு;
மல்லிலே திறமை கொண்ட
மன்னர்கள் படை திரட்டி
வெல்வதே தொழில தாக
வீழ்த்தினர் வெட்டி வெட்டி.

தேடரு செல்வ மெல்லாம்
தேக்கிட மன்ன னுக்கு,
கோடரிக் காம்பாய் மக்கள்
குலத்தினை அழிக்க லுற்றார்;
வீடதும் சமரிற் செத்த
வீரருக் குண்டென் றந்த
மாடரைத் தூண்டி விட்டான்;
மதியிலா மக்கள் மாய்ந்தார்.

படைப் பலங் கொண்டு மன்னன்
பாரினை ஒறுத்த அந்த
மடைமையை உணர்ந்த மக்கள்
மறுகினர் திரண்டொன் றாக;
குடை கொடி கோலைக் கொண்ட
கொற்றவன் ஆட்சி வீழ்த்தி
நடைபெறு மக்கள் ஆட்சி
நடத்துகின் றார்க ளின்று.

மக்களின் ஆட்சி தன்னில்
மாபெரு படைக ளேனோ?
மிக்க நல் லாயு தங்கள்
மிகுதியாய்த் தேட லேனோ?
இக்கணம் அவற்றை யெல்லாம்
இல்லையாய்ச் செய்தா லன்றி
மக்களை மக்களே தான்
மாய்த்திட நேரு மன்றோ!

இனத்தினை இனம ழிக்கும்
இழிந்தவர் செய்கை எங்கள்
மனத்தினி லிருந்து முற்றாய்
மறைந்திட வேண்டும்; இன்றேல்
வனத்துறு வாழ்வு நேர்ந்து
வலியர்கை எளியர் மாயும்
தினத்தினைக் காண்போம்; அந்தத்
தீவினை ஒழிய வேண்டில்,

வஞ்சனை பொறாமை லோபம்
வாழ்வினி லகற்ற வேண்டும்,
வெஞ்சமர் தொலைய வேண்டும்,
வேண்டிய பெறினும் போரை
நஞ்செனக் கருத வேண்டும்,
நானிலத் தொருவர் போரில்
துஞ்சிடில் நரக மென்ற
தூமொழி பரப்ப வேண்டும்.

போர்த்தொழில் புறக்க ணிப்போம்,
பொன்னுல காக்க வேண்டில்
ஆர்த்தெழு படையி லிங்கே
ஆருமே சேர மாட்டோம்!
கார்த்திகைத் தீப மன்ன
காந்தியின் வழிந டந்து
நேர்த்தியைக் காண்போ மென்று
நிச்சயம் முடிவு செய்வோம்.

# ஊர் அறிந்த கேடு.

தேறு கின்ற அறிவு கொண்டு
தெரிகி லாத பொருளையும்
நூறு கண்ட துண்ட மாக்கி
நுவலு கின்ற வாதிகாள்,
ஆறு நூறு சமய மாகி
ஆய்ந்து மென்ன? அறிகிலா
வாறு நின்ற தென்றும் அந்த
வாறு தானி ருக்குதே!

தெரிகி லாத பொருள்க ளுக்குத்
தெரிகி லாத ஒன்றையே
உரிய தான ஏது வாக
உரைகள் செய்யு முறைகளைப்
புரியு மறிவு கொண்ட பேர்கள்
புவியி லொன்று கூடியே
பெரிய தொன்றைச் சிறிய தாக்கிப்
பித்த லாட்ட மாடுறார்!

பொறிபு லன்அ டக்கி யாளும்
புனித மான மனிதரின்
அறிவொ டாற்றல் என்ப வற்றின்
அளவை மீறி நிற்பதை
அறிய எண்ணி ஆவ தென்ன?
ஆய்ந்து காணு மொன்றுபோல்
குறிய எல்லை போட்டே இங்கு
கும்பிட் டுந்தா னென்னடா?

மெய்வ ளைத்துக் கைகு [illegible]த்து
மிகவ ணங்கி நிற்பதில் க
ஐய னேஎன் அர்த்த மோ? இங்
கதுவ ணக்க மாகுமா?
செய்ய லாமிச் சிறிய செய்கை
சிலரை ஏய்க்கப் புவியினில்;
தெய்வ மென்ற பொருளுக் கிந்தச்
சிறிய செய்கை ஏனடா?

வாயி லென்றும் தூபி யென்றும்
வடிவு கொண்ட கோபுரக்
கோயி லென்றும் பூசை யென்றும்
கோடி நூறு பேதமே
ஆயி ருக்கு திங்கு பார்! அவ்
வருவ ருத்த பிரிவினை
நோயி ருக்கு மட்டும் தெய்வ
நோக்க மெங்கு தித்திடும்?

பேரறிவு கொண்ட மக்கள்
பிளவு பட்டு நிற்கிறார்
ஆறறிவுக் கெட்டி லாத
அகண்ட வஸ்து பேரினால்!
ஊரறிந்த கேடி(து); எந்த
ஒன்றின் பேரில் ஒற்றுமை
வேர்நிலவ வேணு மோ,மா
வேற்று மைசெ ழிக்குது!

# போராட்டம்.

தாயுக்கும் சேயுக்கும் அன்பட டா — மலை
தானது போல வளர்ந்திடவும்,
நாயுக்கும் பூனைக்கும் போராட் டம் — இந்த
நானிலத் தேனென்று நாமறியோம்!

தாலிக்கும் கூறைக்குந் தன்பொரு ளே — தந்து
தன்மகற் கென்றொரு பெண்ணெடுக்கும்
மாமிக்கும் பெண்ணுக்கும் போராட் டம் — தமிழ்
மாதர் குலத்தென்று மாறிடுமோ?

புதுமைக்கும் பழமைக்கும் போராட் டம் — இளம்
புருஷர்க்கும் பெண்மைக்கும் போராட்டம் — சட்ட
விதிகட்கும் வீரர்க்கும் போராட் டம் — பெரும்
வேந்தர்க்கும் மாந்தர்க்கும் போராட்டம்!

உப்புக்கும் செப்புக்கும் போராட்டம் — இங்கே
ஒன்றையொன் றுண்பதில் தான்நாட்டம்;
இப்படித் தான்உல கெப்போதும் — இருந்
திருக்கு திங்கென்ன ஈடேற்றம்?

வில்லுக்கும் நாணுக்கு மேற்பட் டுள — ஒரு
விந்தைப்போ ராட்டத்தி லுலுயிர்கள்
கொல்லப் படுவது போல்பிறர்க் கே — பெரும்
கொடுமை செய்யுதிப் போராட்டம்!

உண்டிக் குணவுக்குப் போரா டி — பின்னர்
ஊருக்குப் பேருக்குப் போராடி — இன்று
கண்ட தெதற்குமே போராட் டம்! — அது
காசுக்கும் ஓர்தொழில் ஆச்சுதடா!

# என் மனைவிக்கு.

மாந்தர்குல வீதி, இது
மண்ணுலகம்; இங்கே
சார்ந்தவர்கள் பற்பலருட்
சச்சரவென் றெங்கள்
ஏந்தல் இறை யோனுமெனை
இங்கனுப்ப, எங்கள்
காந்தருவ நாடுவிட்டென்
கண்மணியே! இங்கே,

உன்றனுக்கும் சொல்லவில்லை
ஓடிவந்து விட்டேன்;
என்கவலை அவ்வளவு;
ஏன் தமிழர் நாடு —
செந்தமிழும் தீரமதும்
தேங்கிய இத் தேசம் —
நொந்திழிந்து போகுதென்ற
நோக்கமத னாலே.

இங்கு வந்து பார்த்தறிந்தேன்
என் கிளியே! நாடு
மங்குகின்ற தற்கிந்த
மாந்தர்கள்தான் ஏது!
எங்கிருந்தோ இங்கு வந்த
'இங்கிலி'சைக் கண்டு,
தங்கள் நடை பாஷை உடை
தாமனைத்தும் விட்டார்.

வேற்சண்டை செய்தவிறல்
வீரர்களின் மக்கள்
காற்சட்டை தொப்பிகளுள்
கட்டுண்டு போனார்!
நாற்றண்டை யெட்டிடவும்
நாணமுறு கின்றார்!
சோற்றுக்கும் சேலைக்கும்
சீமைக்குப் போனார்!

கச்சேரி கோடு கந்தோர்க்
கட்டடங்கட் குள்ளே
கைலஞ்சம் வாங்கவும் பொய்
கள்ளமதும் ஓங்க,
நச்சேறிப் போனமன
நல்லபிள்ளைப் பேர்கள்
நாட்டிலெங்கும் நன்றாய்த்தம்
பாட்டிலுழைக் கின்றார்.

அறத்துக்கும் திறத்துக்கு
மாய்வாழ்ந்தோர் நாட்டில்,
மறத்துக்கும் நிறத்துக்கும்
மதத்துக்கு மாக,
உறுகின்ற பகைமைக்கிங்
கோரெல்லை யில்லை;
பெறுகின்ற பேறின்னல்
பிறிதொன்று மில்லை.

பைங்கூந்தற் பெண்மயிலே,
பாரில் எனைத் தேடி
எங்கூர்ந்து விட்டாயோ
என் பிரிவால் வாடி!
இங்கே இம் மங்கையர் போல்
ஏட்டிக்குப் போட்டி
எங்கே இட் டெம்வாழ்வை
இன்றமைற் காட்டி —

விட இங்கு நீ கற்று
விடுவாயோ என்றே,
மட அன்ன மே! அங்கு
மறித்துன்னை வந்தேன்;
சுட வைத்த சொல்லம்பு
சுறுக்கென்றே ஏற்றும்
திடமுள்ள பெண்கள் வாழ்
தேசம் பார், மோசம்.

## என் மகளுக்கு.

மின்னொளித் தீபம் உற்ற
மேகநற் கோல மிட்ட
கின்னர வீதி வைகும்
என்னரு மகளே! இங்கு
முன்னொரு தடவை ஏக
முனைந்தனை; வேண்டாம் என்றேன்;
பின்னரு முனைந்தாய்; ஈங்கு
பெண்கள்பா டறியாய் போலும்!

வேலையை நாடி ஆண்கள்
விழுந்தடித் தோடு கின்ற
காலையின் பின்எ ழுந்து
காப்பியென் றொரும ருந்தில்
பாலையும் சிறிது சேர்த்துப்
பருகிட வேண்டும்; ஈங்கு
மாலையில் ஆண்கள் முன்னர்
மாதர்கள் தூங்க வேண்டும்!

காதுகள் துளைக்க வேணும்;
கண்ணிணை முதலி ருந்து
பாதுகை வரையும் ஏதோ
பலபல பூண வேணும்;
ஏதுகள் எதுவு மின்றி
இரைந்திரைந் தாட வேணும்;
சாதுகள் போலி ருந்து
சட்டென வெடிக்க வேணும்!

நேரமொர் விதம தாக
நிறங்களை மாற்றி மாற்றி,
ஊருள வீதி தோறும்
உலவி அவ் விளைஞர் தங்கள்
ஆருயிர் வாங்கும் உண்கண்
அம்புகள் வீசி வீசிக்
கோரமென் றுலகு சொல்லாக்
கொடுமைகள் பயில வேண்டும்!

வேறுமொன் றுளதே இந்த
வேளையில் ஈங்கென் னேடு
மாறுதல் கொண்டு யாரோ
மாரனென் ருெருவன் தன்கை
வீறுகள் காட்டு கின்ருன்,
வீழ்ந்தவன் ஒழியு மட்டும்
ஆறுத லாயி(ரு); அன்றேல்
அவன்கணைப் படுவை நீயும்.

# தீபாவளியா?

பட்டாசு சுட்(டு), இருள்போய்ப்
பகலாகு முன்னாலே,
சிட்டாய்ப் பறந்தடிக்கும்
சிறுவர்களின் கூச்சலினால்
கொட்டாவி விட்டெழுந்து
'கொண்டாட்ட மென்ன?' வெனத்
திட்டாக் குறையாகத்
'தீபா வளி'யென்றார்.

தீபா வளியா! அத்
திருநாளா! ஓகோகோ!
தீபா வளியின்று
திரும்பவுமே வந்ததுவா?
ஆமா, அதற்கேனிவ்
வார்ப்பாட்டம்? அன்றொருநாள்
சாமா றசுரனைமால்
சாய்த்துவிட்ட தற்கோடா?

போகட்டும்; இங்கந்தப்
பொல்லா அசுரகுலம்
சாகட்டும்; இன்றந்தச்
சாதனையைக் கொண்டாடல்
ஆகட்டும்; ஆனலின்
றசுரக் கொடுமையெமை
வேகட்டும் என்றிழைத்த
வேதனைகள் தீர்ந்தனவா?

சங்கடங்கள் ஓய்ந்தனவா?
சஞ்சலங்கள் தேய்ந்தனவா?
வெங்கொடுமை செய்கின்ற
வெறியரினம் மாய்ந்ததுவா?
எங்கள் உரிமைகளிங்
கெல்லாம் இயைந்தனவா?
இங்கெதற்குப் பின்னிந்த
ஈனத்தீ பாவளிதான்!

வஞ்சச் செயல்புரியும்
வல்லரக்கர் வீழ்ந்தனரா?
பிஞ்சுக் குழந்தைகளைப்
பெண்களினைப் பிய்த்தெறிந்து,
விஞ்சும் அனல்மூட்டி
வீடுகளை வேகவிடும்
நஞ்சு நரகரெலாம்
நாசமுற்றுப் போயினரா?

இன்னும் அரக்கர்
இருக்கின்றார்; இன்னொருமால்
தின்னும் வரையவரைத்
தீபா வளியெமக்கேன்?
மன்னும் அசுரபயம்
மக்களினைக் கொல்கையிலின்
றென்னத்தைக் கொண்டாடி
ஏமாற்றப் பார்க்கின்றீர்?

மீண்டு மொரு கடவுள்
மேதினியில் வந்தெம்மை
ஆண்டிவ் வசுர பயம்
ஆற்றிவிடு மன்றுவரை
வேண்டா மெமக்கிந்த
வெறுந்தீ பாவளிகள்;
ஆண்டாண்டு தோறுநெச
வாலைகளின் நாளிதென,

கொண்டாடி ஆலையிலாக்
குறையைத் தவிர்ப்போம், பின்
திண்டாடி வாழ ஒரு
தேவையிலை; தேவனென
நின்றோடும் ஆலைகளின்
நேமிகளே நீசர்களைத்
தின்றோடிக் கொண்டுதரும்
தீபத் திருநாளே.

# தை பிறந்தது.

தைபி றந்தது, வழிபி றந்தது!
தமிழ்கு டித்தெனக் களிபி றந்தது!
மெய்பி றந்தது போலு லகினில்
மேவி எங்கும் ஒளிப ரந்தது!

இருள்ப றந்தது, குளிர்ஒ ழிந்ததிவ்
விருநி லத்தினில் அருண தேவன்
அருள்நி றைந்தது, பொருள்ப ரந்ததின்
னறிவு போலத் தொழில்வி ரிந்தது!

காய்க னிந்தன, கனியு திர்ந்தன,
கதிர்க ளெல்லாந் தலைகு னிந்தன,
வாய்தி றந்திதட் கள்வ ழங்கிடும்
வனிதை யென்ன மலர்ம லர்ந்தன!

நோய்ஒ ழிந்தது, நுளம்ப ழிந்தது,
நுண்ணி டைமருட் கண்ண ழகுடை
ஆய்ம லர்த்தொடை அணங்க னாருக்
கவனி யெங்கும் மணமெ ழுந்தது!

வீடு தோறும் முழவ திர்ந்தது,
வீதி தோறும் விழவெ ழுந்தது,
பாடு பட்ட மக்கள் நன்கு
பருக இன்பப் பயன்வி ளைந்தது!

உழவர் தந்த ஊர ரிசியும்
ஊற்றெ டுக்குது பாலுந் தேனும்
பழவ கையொடு முன்றி லெங்கும்
பாய்ந்து பொங்கிப் பரிம ளிக்குது!

பொங்கல் பொங்கிடப், புவிமு ழுவதும்
புதுமை பொங்கிடப், பொதும னிதர்கள்
தங்கள் வாழ்வும் தமிழும் பொங்கிடத்
தைபி றந்தது! தைபி றந்தது!

# சுழற்சி.

மாரி வந்து போனது;
மாநி லத்தாய் நீரினை
வாரி வைத்துக் கொண்டனள்;
வறுமை யுற்றுக் கோடையில்
நீரி லாமல் உயிரெலாம்
நின்று வாட, அரசினர்
பாரி லுணவு தருதல் போல்
பங்கு பண்ணித் தந்திட.

கோடை யின்னும் வரவிலை,
கூதல் நீங்கி விடவிலை;
வாடை யின்னும் வீசுது
மாசி தானிப் பாகுது;
ஓடை நீரும் சலசலென்
றோடி யெங்கும் பாயுது;
சாடை யாய்வ சந்தமும்
சஞ்ச ரிக்கப் பார்க்குது.

குயிலு மொன்றி ரண்டுதான்
கூவி வந்து, பாடல்கள்
பயிலு கின்ற பாவையர்
பண்பி னைத்துப் பாடுது;
வெயிலும் நன்று காயுது,
விடியற் காலைப் பனியிலே
மயிலும் நாணு மழகினை
மரமுந் தடியுஞ் சொட்டுது.

ஆட்கள் சொல்லி வைத்தபோல்
ஆத வன்பு றப்பட
பூக்க ளென்ன ஜாலமாய்ப்
புன்சி ரிப்புக் காட்டுது;
வாட்கண் மாதர் மேனியின்
வர்ண ஜாலப் பொலிவெலாம்
மாக்கள் நீட்டுந் தளிர்களில்
மட்டுங் காட்டி நிற்குதே!

காலம் கொஞ்சம் கொஞ்சமாய்க்
கட்டு மீறி யோடவே,
ஞாலங் "கோடை" யென்றது;
'நாச காலம் வந்த'தென்
றேல மிட்ட இலையெலாம்
ஒவ்வொன் ருயு திர்ந்தன,
சீலம் நண்ணு முன்னரோர்
சிதைவு நண்ணல் போலவே.

வற்றி வாடி யென்புரு
வாகி நின்ற மரமெலாம்
சற்று நாட்கள் சென்றதும்
சருகு திர்ந்த கொம்பிடை,
அற்று வீழ்ந்த பழமையின்
அடியிற் புதுமை தோன்றல்போல்
கற்றை கற்றை யாய்த்துளிர்
கக்கி யின்ப மெய்தின.

காற்றெ ழுந்த டித்தது,
ககனத் தேமு கில்வட
பாற்ப றந்து சென்றது
படையெ டுத்து; பின்சில
நாட்கள் சென்ற தும்நில
நாய கிக்குத் தன்உள
வேட்கை கூறத் தென்திசை
விம்மி யோடி வந்தது.

பின்னும் மாரி ஆனது,
பிறகுங் கோடை வந்தது;
இன்னுங் கால மிப்படித்
தான்சு ழன்று வந்திது
முன்னி ருந்த உலகுதான்,
முன்ன டைந்து விடவில்லை,
என்னு முண்மை காட்டுதிங்
கேற்ற மில்லை; மாற்றமே!

# வெங்காயம் விலை ஏறிப்போச்சு.

வெங்காயம் விலையேறிப் போச்சு – பொருள்
வேறெல்லாம் அப்படியே ஆச்சு!
'அங்காலி'ச் சாமான்கள் இன்னும் – விலை
அதிகமாய்ப் போமென்றே பேச்சு!

உளுந்துக்கு வலைபோட்டுப் பார்த்தோம் – மல்லி
உள்ளிக்கும் அலைபட்டு வேர்த்தோம்;
விருந்துக்கோர் வேளைக்குச் சோறு – போட
வில்லங்கப் பட்டதைத் தீர்த்தோம்!

கட்டத் துணிமணிக் காக – செட்டை
கட்டிப் பறந்தடித் திட்டோம்;
குட்டிச் சுவராகிக் கொண்டே – வெறும்
கோழைக ளாய்ப்பிழைக் கின்றோம்.

நாளை நமக்கென்ன வாகும் – நாலு
நாட்டிலு மேநகைப் பாகும்!
சூளையி னுள்ளிருந் தேதீ – அதைச்
சுட்டெரித் திட்டவா றாகும்!

அண்டிப் பிழைத்துயிர் வாழ்ந்து – பெரும்
'ஆபீசு' கட்குள் மறைந்து,
தொண்டுத் தொழில்செயப் போகும் – அரைத்
துரைமார்க ளேஇதைக் கேளும்!

மயங்காத புத்தியுண் டானால் – சற்றும்
மலையா நிதானமுண் டானல்,
கயங்காத காற்சட்டைக் காரீர் – தொழிற்
கலைகளைக் காத்திட வாரீர்.

# பாண்டியா எங்குற்றுய்?

பாண்டியனே, எங்குற்றுய்?
பழிகாரா! உன்னுடைய
தூண்டுதலி னலன்றே
தமிழ்வளர்த்தோம்! தொன்மைபோல
ஆண்டிடுவாய் எமையென்றும்
அஞ்சவிடாய் என்றெங்கள்
நீண்டதமிழ்ச் செல்வத்தை
நின்காவல் தனில்வைத்தோம்.

நீருக்கும் நெருப்புக்கும்
நீகொடுத்த தமிழ்போகப்
பாருக்குள் எஞ்சியதைப்
பக்குவமாய் வைத்தாயோ?
ஆர்கைக்கு நீ கொடுத்தின்
றகன்றிட்டாய்? தமிழனையின்
‘வீர்’ என்ற குரல் அவரை
வினையாகி வீழ்த்தாதோ?

தாய்நாட்டிற் றமிழினையார்
தாபரிக்க வைத்திட்டாய்?
சேய்நாட்டில் அவளினைநீ
சீரழிய விட்டாயே!
போய்நாட்டிப் புகழினைநீ
பொறித்தென்ன? புலவர்களைப்
பேய்காட்டி விட்டாயே!
பெருமோசக் காரனடா!

போர் பாடிப் புகழ்பாடிப்
புவியெல்லாம் பரவியஉன்
பேர்பாடிப் பெருநெறியிற்
பிறழாமல் அன்றிருந்தோம்;
ஆர்பாடிக் களிப்போமின்
றனியாயம், தமிழனுயர்
சீர்பாடிக் கொண்டாடத்
திருநாளும் எமக்கில்லை.

தீபா ் வளியும்
திருநாளும் என்றெல்லாம்
ஓவாது வந்திங்
கொழிகின்ற தெற்றிற்கோ!
நாவா லுரைக்க
வழியில்லை நமதிடரை
நீபாரா யென்றாலோ
நீக்கவழி யொன்றில்லை.

மீண்டும் ஒருமுறை நீ
மேதினியில் வந்தெம்மைத்
தூண்டித் துயர்களைந்து
தொன்மை முறைநாட்ட
வேண்டும், அது உன்றன்
மேலாம் கடமையடா!
பாண்டியா! எங்கிருந்தும்
பறந்துவா, வீழ்கின்றோம்.

# சீரழிந்து வாழ்வதா?

பகைவர்தம்மை நடுநடுங்கப்
பண்ணிவைத்த பாண்டியர்
பாதுகாப்பின் கீழுயிர்த்த
பண்பினோர்கள் நாங்களா?
வகைகள் கொண்ட சேனைவந்து
வளையமிட்ட போதெலாம்
வாளைவீசி வாகைபூண்ட
வம்மிசத்தார் நாங்களா?
தகைமைகொண்ட சேரசோழர்
தங்குலத்து தித்தநாம்
தாள்மடித்துக் கைகுவித்துத்
தலைவணங்கி நிற்பதா?
சிகைகள் போவ தாயினும்நம்
ஜென்மபூமி வேறொரு
சீமையாளர் கைக்கொடுத்துச்
சீரழிந்து வாழ்வதா?

அந்நியர்கள் வந்துநாட்டை
அடிமைகொள்ளப் பார்க்கையில்
ஆர்த்தெழுந்த திங்குமுன்னர்
ஆண்பிள்ளைகள் மட்டுமா?
கன்னியர்கை வாளெடுத்துக்
கட்டுமீறிச் சென்றுபோர்க்
காட்டினூடு பகைவர்தம்மைக்
கண்டதுண்ட மாக்கினர்!

சென்னிவீழ வீழநின்று
ஜென்மபூமிக் காகநம்
சிறுவர்கூடச் சமர்புரிந்த
சீருமுண்டி வற்றினைப்
பன்னியென்ன பயனுடைத்து ?
பண்டைநாள்தி கழ்ந்தபோற்
பண்ணிவைக்க வேண்டுமிந்தப்
பாரிலெங்கள் நாட்டினை!

கொடியர்தம்மை முடிவுசெய்யக்
கொற்றவர்க ளில்லையோ!
கோதிலாத பேரைவாழ
வைக்கமற்றோர் இல்லையோ!
கடமையென்று நாடுகாக்கக்
கற்றவர்கள் இல்லையோ!
கடையர்தம்மை ஓட்டவலிமை
உற்றவர்கள் இல்லையோ!
அடிமையாக நாங்களென்றும்
படியிலஞ்சி வாழவோ!
அவர்களாள நாங்களென்ன
ஆண்மையற்று மாளவோ!
கடவுயானை தேர்கள்கொண்ட
பெருமையின்று போகவோ!
கடவுளேஎ மக்கும்இந்தக்
காலம்வந்து சேரவோ!

# எம் முன் இருந்த தெய்வம்.

இஷ்ட குலக்கடவுள் – எம்முன்
இருந்த தெய்வமொன்று – மனித
துஷ்டத் தனத்தாலே – அதுவும்
சூக்குமம் ஆகிவிட,

எட்டு வரியெனினும் – அதைமுன்
னிட்டுக் கவிதையொன்று
கட்டி அனுப்புகென்ற – உங்கள்
காகிதம் வந்ததுதான்.

'சொட்டு'க் கவிதையுமே – அன்றென்
சோக உளத்தினிலே
தட்டுப் படவுமில்லை – இதுவரை
தாபமும் ஆறவில்லை.

உள்ளம் தெளிந்ததிப்போ – கொஞ்சம்
ஊக்கம் பிறந்ததுண்டே – ஆயின்
வெள்ளம் எனப்புரளும் – கவிதை
வேகம் பிறக்கவில்லை

"ஆறாத துக்கம், இதெம் – உள்ளம்
ஆற்றாத பேரிழவு;
மாறாத கேடடடா! – நூறு
மாமாங்கம் ஆனாலும்........."

என்று வருங்கவியும் – ‘சன்னம்
எப்படி அண்ணலினைக்
கொன்றிடும்?’ என்ற எண்ணம் – எழவும்
நின்றிடும்; நின்றுவிட.

“இந்திய நாட்டினுக்கா – இல்லை
இத்தல முற்றினுக்கும்
சொந்தம தாயஒரு – மனிதச்
சொத்தினை, வித்தகனை.........”

என்று தொடங்கிடுவேன் – ஆனால்
ஏக்க அலையினிலே
ஒன்றல, ஒன்பதெனச் – சிந்தை
ஓடி மறைந்துவிடும்.

செத்தனனோ அடடா! – காந்தி
செத்து மடிபவனோ...? – இல்லை;
உத்தமன் வாழுகிறான்! – என்றன்
உயிரும் வாழுகுதே!

நித்தியன் வாழுகிறான்; – என்றும்
நிமலன் வாழுகிறான்;
சத்தியம் வாழுகுதே; – அஹிம்சைச்
சாதகன் வாழானோ?

பத்திரி காசிரியீர்! — என்ன
பாதகம் செய்துவிட்டீர்!
செத்தனன் என்றேதோ — என்னைச்
செப்பிடச் சொன்னீரே!

வையம் அழிந்திடினும் — இந்த
வாழ்வு பறந்திடினும்,
ஐய! அதுகுறித்தே — நான் ஓர்
அடியும் பாடேனே!

# கேட்டியோ பாரதீ!

நாட்டிலே மிக்குயர்
நந்தமிழ் நாடது
கேட்டிலே மிக்கிழி
கீழ்நிலை எய்தலும்,
ஏட்டிலே தீட்டிய
எண்ணரும் இன்சுவைப்
பாட்டினு லேயதைப்
பாலித்த பாரதீ!

கேட்டியோ! அன்றுனைக்
கீழ்மைப் படுத்திய
நாட்டிலே நின்கவி
நாதம் நிறைந்தது;
ஈட்டிவேல் வாளெனத்
தீட்டிநீ விட்டசொற்
பாட்டினுல் எம்தளைப்
பாரம் குறைந்தது!

குறைவுறு நின்குறிக்
கோளெலாம் கண்முனே
நிறைவுறு முன்உயிர்
நீத்தனை; ஆயின் என்?
மறைவுறு நின் புகழ்
மண்டிப் பரக்க அத்
துறையெலாம் புலமையில்
தோன்றிவிட் டோமடா!

# கவிதை ஊற்று.

ஊற்றெ டுக்குது கவிதை – ஆருய்
ஓட்டெ டுக்குது கவிதை;
ஈர்த்த ணைகளை யெல்லாம் – உள்நின்
றிடித்தெ றியுது கவிதை.

நேற்றெ ழுந்தஓர் புயலால் – கவிதை
நிற்கு தில்லையென் கட்டில்;
காற்றெ ழுப்பிய காட்டுத் – தீபோல்
கனன்றெ ழுகுதென் உள்ளே.

ஆற்ற வும்வழி தெரியேன் – அதனை
அடக்க வும்வகை அறியேன்;
ஏற்ற வும்இடர் உண்டே – இங்கே
எதனைப் பாடுவ தென்றே!

வீட்டைப் பாடு வேனோ? – எங்கள்
விதியைப் பாடு வேனோ?
நாட்டைப் பாடு வேனோ? – மக்கள்
நலிவைப் பாடு வேனோ?

வெற்றி பாட லாமோ? –எங்கள்
வீழ்ச்சி பாட லாமோ?
பற்றி எம்மை ஈர்க்கும் – அற்பப்
பதரைப் பாட லாமோ?

தொத்திக் கொண்டெம் மேலே – வயிறு
தொந்தி வைக்க, எங்கள்
சத்தை உண்ணும் சாதி – மேலே
சரமம் பாட லாமோ?

வாய்மை மிக்க நாட்டின் – அடிமை
வாழ்வு பாடில் நன்றோ?
தூய்மை கொண்ட பேர்கள் – அடையும்
துயரம் பாடில் நன்றோ?

உரிமை பாட லாமே – அடடா!
உணர்வை ஊட்ட லாமே!
சிறுமை செய்கு வோரை – வெல்லும்
செய்தி பாட லாமே!

அரியை முயலும் வென்ற – தென்ன
ஆயு தத்தி னலோ?
கரியை நரியும் வெல்லும் – என்று
கவிதை பாட லாமே!

தாழ்மை யோடி ருந்து – பெற்ற
தாய் இழந்து போன,
ஏழ்மை பாடி வீரக் – கனலை
ஏற்றி வைக்க லாமே!

இதனைப் பாடில் என்றன் – பாடும்
என்ன ஆகு மோ? வே(று)
எதனைப் பாடிக் கவிதை – உற்றை
ஏற்றி ஏற்றிப் பார்ப்பேன்?

# எங்கள் பெருநிதியம்.

வெள்ளிக் குவைகளெங்கள் செல்வ முமல்ல – ஒளி
வீசும் மணிவகையெம் செல்வ முமல்ல;
அள்ளிச் சொரியினுங்குன் றுது மலைபோல் – வளர்
அந்த நவநிதி எம் செல்வ முமல்ல.

இங்கு கவிஞர்குலம் என்று பலரும் – சொல்லும்
எங்கள் பெருநிதியம் எம்க விதையே;
பொங்கு மனநிலத்தைக் கிண்டி, அதனுள் – கவிப்
புதையல் இருப்பதனைத் தோண்டி எடுப்போம்.

தோண்டி எடுத்ததனைத் துப்புர வாக்கி – ஒரு
தோற்றங் கொடுத்ததனை நாண யமாக்கி,
வேண்டி வருபவர்க்கும் வேறெ வர்கட்கும் – நாம்
வேத முறைகடந்து தானமும் செய்வோம்.

கொட்டிக் குவித்ததனைக் கும்பல் களாக்கி – அதில்
குதித்துக் குதித்துவிளை யாடி மகிழ்வோம்;
கட்டிப் பிடித்துருண்டு கற்ப னைத்தேவி – உடன்
கவிதை உலகினிலே காதல் புரிவோம்.

மண்ணை ஒரு கவிக்கு வாங்கி விலையாய் – அதில்
மாந்தர் அனைவரையும் ஈடு கொள்ளுவோம்;
விண்ணை ஒரு கவிதை வீசி அளப்போம் – அங்கு
விந்தைச் சிருஷ்டிகளைச் செய்து களிப்போம்.

நாட்டை ஒரு கவியில் தட்டி எழுப்பி – இந்த
ஞாலம் புகழ அதன் கட்டை அறுப்போம்;
வாட்டி வதைத்துமுடி சூட்டு பவரைக் – கூர்
வாள்போல் ஒருகவிதை வீசி அறுப்போம்.

உப்புக் கொருகவிதை செப்பி விடுவோம் – இந்த
ஊரை ஒரு கவியிற் கொள்ளை யடிப்போம்;
வெப்புக் கொருகவிதை செப்பி அணைப்போம் – இந்த
விந்தைச் சிகிச்சைகளெம் சொந்த முறைகள்.

இன்னும் பலபுரியும் எங்கள் தனத்துக் – கோர்
ஈடும் எடுப்புமில்லை எவ்வு லகிலும்;
மின்னும் மினுங்கும்அது பொன்ம ணிகள்போல்–எங்கும்
செல்லும்; அதற்குநிறை சீவ னுமுண்டே.

## நடக்காது அந்த நயவஞ்சம்.

சிந்தனையிற் சிலபலநல் லெண்ண மெல்லாம்
சேர்ந்தங்கே அலையலையாய் மோதிக் கொண்டு
வந்தணையும் போததனை எழுத என்றால்
வழியில்லை — தடைகள்பல வந்தி ருக்கும்;
முந்தி எமக் குறவென்று சொல்லிக் கொண்டு
முழுநாளும் வந்திருந்து பேசிப் பேசித்
தொந்தரவு தருகின்ற பேர்கள் ஓர்பால்,
தொலையாத இவ்வாழ்க்கைத் தொல்லை ஓர்பால்.

கடமை, அது இது, என்று சொல்லி எம்மைக்
கட்டாயப் படுத்துகிற சமூக சட்டம்
மடமையது என்பதற்கு மனமு மில்லை,
மகிழ்ந்ததனைக் கைக்கொள்ளுங் குணமு மில்லை;
சடபுடெனப் பேசி'எனக் கிப்போ நேரம்
சற்றுமிலை, மன்னியுங்கள்' என்று சொல்லித்
திடமுடனே உட்சென்றென் அலுவல் செய்யும்
திறமுமிலை, தமிழில்அதற் கிடமு மில்லை.

இந்தவிதத் தொல்லைகள்சற் றில்லை யானால்
எண்ணங்கள் மலைமலையாய்க் குவியும் போது,
தந்தி என ஒருவன்வந் தலறி விட்டால்
தகவல் என ஒருவன்வந் துளறி விட்டால்,
முந்தி, அட, மூளையிலே நிறைய வந்த
முழுவதும் ஓர் மூலையிலே ஒடுங்கிப் போகும்;
அந்தஅதைப் பின்னேபோய்த் தேடிப் பார்த்தால்
அகப்படுமா...? அநியாயம்! சிதைந்தி ருக்கும்...

எண்ணங்கள் வரும்போதி லிடைஞ்ச லின்றி
எழுதவுந்தான் வாய்ப்பிருந்தால், எண்ணி யெண்ணிக்
கண்ணுந்தான் தெரியாமல் மூடிக் கொள்ளக்
கற்பனையில் ஆழ்ந்திட்டால் அதுவும் போச்சு!
இன்னென்று, கவிதையிலே எழுத வந்தால்
எதுகைக்காய் எண்ணமெலாம் மாறிப் போகும்;
பண்ணென்றும் பாட்டினிலே சொல்ல வந்தால்
பண்ணுக்காய்ப் பொருள்சிதைவு பட்டுப் போகும்.

வசனத்திற் சொல்ல என எடுத்துக் கொண்டால்
வடிவான தமிழ்க்கவியில் வடியு மின்பம்
வசனத்தில் வருகுதிலே - என்ன செய்ய...?
வாழ்வினிலே இடையிடையில் வந்த டிக்கும்
விசனத்தின் அலையொன்று மெல்லெ ழுந்து
வீசிவிட்டால் எண்ணமெலாம் வேருய்ப் போக,
வசனத்திற் கவிதையினில் அல்ல, வேறே
வாய்விட்டுச் சொல்லி எதற் கென்ருய்ப் போகும்.

வாய்விட்டுச் சொல்லவுந்தான் வந்து விட்டால்,
வந்தபடி சொல்லுவதோ அல்ல திந்தப்
பாழ்பட்ட - ஏன் அது போ - பலபேர் மெச்சப்
பாருலகுக் கேற்றபடி பதமை யாக்கி
ஏய்பட்டுப் பிறர் புகழை ஏந்து தற்காய்
எண்ணத்தை மாற்றுவதோ ... ? என்றென் றெண்ணி
நாட்பட்டுப் போச்சுதடா! நடக்கா தந்த
நயவஞ்சம்; அதற்கெதிராய்த் துணிந்து விட்டேன்.

# இல்லையான காவியம்.

## கடவுள் வாழ்த்து

இல்லை உண்டென் கின்ற வாதம்
இன்றும் அன்றும் என்றுமிங்
கில்லை யாக இல்லை யாக்கும்
இல்லை யான இறைவனே!
இல்லை யான காவி யத்துக்
கெழுது கின்ற இவ்வுரை
இல்லை யான தேதுங் கொண்ட
தில்லை யாக வேணுமே.

## அவையடக்கம்.

எல்லாரு மேதோ எழுதுகிறார், அவ்வவற்றைப்
பல்லாருங் கூடிப் பரிகசித்துத் தள்ளுகிறார்;
வல்லாரும் என்கவியை வசைகூற முயல்வாரோ?
இல்லாத காவியத்துக் கென்னசொல்ல இருக்கிறது!

## நூன் முகம்.

இலக்கியமா செய்கின்றேன்? இல்லை யில்லை,
எவரையும்நான் மகிழ்விக்க எண்ண வில்லை;
கலக்கியடிக் கின்றசில நீதி கூறும்
கற்பனைகள் சொல்லிடவுங் கருத வில்லை;
நிலத்தினிலே நடக்கின்ற நிகழ்ச்சி பட்டென்
நினைப்பினிலே தெறிக்கின்ற கிரணக் கற்றை
புலத்தினிலே உருவங்கள் பொறிக்கு தங்கே
பொத்திவைக்க இடமில்லை, போடு கின்றேன்.

# நாட்டு வருணனை.

சூழ நீள்கடல் சூழ்ந்து கிடப்பினும்
ஆழ நீளம் அறிந்தில வாறுபோல்,
ஆளை ஆள்அங் களந்தறி யாதது
'ஈழம்' என்றொரு நாடிருக் கின்றது.

வாளை தாவி வயலிடைப் பாய்வதும்
பாளை மோதப் பழவகை வீழ்வதும்
கூழை வாழைக் குலைகளைச் சாடலும்
வாழை தேனை வழங்கலும் அங்கிலை.

ஆனை யான அடங்கிக் கிடப்பதும்
பூனை யான புடைத்துக் குதிப்பதும்
சேனை நாயகர் சித்திரச் சிங்கங்கொண்
டானை ஆள நினைத்ததும் அங்குதான்.

மந்தி சிங்க மயிரினைப் போர்த்(து),'ஒரு
முந்தி வந்த முழுமுதல் தான்' என
நந்தி தம்மை நவைசெயும்; இங்கிவை
வெந்து நொந்து வெடித்தெழுந் தார்த்திடும்.

வானை நோக்கி வளர்ந்த பனையினைக்
கானை நோக்கிக் கவிந்த பலாவினம்
சேனை போலச் சிதைக்க வளர்ந்திட
ஆனை போல அதுவும் உயர்ந்திடும்.

ஆதி கால அரக்கர் பரம்பரைச்
சாதி யொன்று சதிசெய்தங் கேஉள
வீதி யெங்கும் வெறிகொண்டு நிற்குது;
நீதி மெள்ள நிலைகுலை கின்றதால்.

தொன்று தொட்டு வளர்ந்த கலையினை
இன்றுறிங் நேற் கெழுந்த முளை இலை
கொன்று தின்னக் குதிகொள்ளு கின்றது;
வென்று செல்லும் விதியிதற் குள்ளதோ?

ஆலை தோறும் அரசியற் போர்களும்
வேலை தேடி விழுந்தடிப் போர்களும்
வாலை வாரி வளம்பெறு வோர்களும்
சாலை தோறும் சளக்குரைப் போர்களும்,

கூலி பேசிக் குழப்பஞ்செய் வோர்களும்
போலி வேஷப் பொதுநலப் பேர்களும்
பாலி யாற்றுப் படுமணல் தன்னிலும்
நாலி லொன்றுக் குயர்ந்ததந் நாட்டினில்.

சூழ்ச்சி செய்து சுகமெடுப் போர்களே
ஆட்சி செய்யும் அரசியல் வானிடை
காட்சி தந்து களிநட மாடுவார்,
வீழ்ச்சி யெய்தும் வியப்பதும் உண்டுதான்.

# நகர வருணனை.

பழங்குடி யறியாப் பதி;மொழி நூறு
வழங்கிடு 'கிழும்பு' வான்நகர் அதனில்
களங்கமொர் கோடி கண்மறை வாக
விளங்கிடும், அதைநான் விரித்திட லாமோ?

எத்தனை சாதி, எத்தனை சமயம்,
அத்தனை யாகு மனுசா ரங்கள்;
உத்தமர் களுமுளர் ஒருமணி வேளை,
பத்தினி களுமுளர் பகலினி லங்கே.

* * *

வந்தனைகள் செய்குவது வானவரை யல்ல,
தந்தமது மேலையதி காரிகளை யாகும்;
சந்ததமும் அந்தவகை சாதனைகள் செய்வோர்
ஏந்தவகை யாலுமுயர் வெய்துவது சாலும்!

மிஞ்சிவழிந் தோடுவது மேல்வீதி யெங்கும்
விஞ்சுவிசை வண்டிகளே, வெண்ணெய்தயிர் அல்ல;
கஞ்சிகழு நீரினையும் காண்பதரி தென்றும்
அஞ்சிடுவர் தண்ணீரும் அற்றுவிடும் என்று.

* * *

மாடிகள் கோடி யங்கு
மனைகள்முன் மலர்த்தோட் டங்கள்
கோடியின் பின்னால் எங்கும்
குப்பைசேர் குச்சு வீதி;
பேடிகள் போல, மக்கள்
பெருகிய கூட்டத் தார்கள்,
வாடிய சிறுபான் மைக்கு
வகுப்பது பிறிதோர் நீதி.

பூக்களோ அங்கு மல்கு
பூவையார் ஒத்த வாகும்,
நோக்கவே அன்றி வேறு
மோக்கவோ உதவா; என்றும்
‘ஆக்களோ’ அடிவ ழுக்கி
அதிகமாய் விழுவ தெல்லாம்
மாக்களின் மதத்தா லல்ல,
மக்களின் மதத்தா லாகும்.

## நூல்.

காவியமா எழுதவந்தேன்? இல்லை இல்லை,
காவியத்துக் கிங்கேயோர் கதையு மில்லை;
மேவியநற் றலைவனிலைத் தலைவி யில்லை,
மேலான என்கவியை மெச்சி மெச்சிப்
பாவினிலே உயர்ந்ததெனப் பரிச ளிக்கப்
பண்புடைய வள்ளலொரு பேரு மில்லை;
காவியமேன் எதற்காயிங் கெழுத வேண்டும்?
கட்டிவைப்போம் ஏட்டினைஇக் கணக்கி லேயே!

# நெஞ்சின் அலைகள்.

நெஞ்சின் அலைகளினை,
நீலத் திரைக்கடலே!
மிஞ்சி அடித்(து), உன்றன்
மேல் நான் படர்கையிலே,
வஞ்சி யனையாள், இல்
வாய்ந்த கிளியாளின்
நெஞ்சுத் துடிப்பினை நீ
நினைவு படுத்துகிறாய்.

கொஞ்சுங் குழந்தைகளின்
கும்மாளங் காட்டி, அவர்
பிஞ்சுத் தளிர்க்கரம் ஊண்
பிசைதல் நினைவூட்டி,
பஞ்சு நுரைச் சோறென்
பாதையிலே சிந்திவரும்
விஞ்சும் அலைக்கடலே
வினை முடிக்கச் செல்லவிடு.

செங்கடலே நீ யளவிற்
சிறிதா யிருந்து முளம்
பொங்குகிறாய் ஏனோதான்
புழுங்குகிறாய் இவ்வளவாய்!
அங்(கு)ஆ பிரிக்காவிங்(கு)
அரபுக் கிடைநடுவில்
தங்கா துனதுளமும்
தத்தளித்துப் போகிறதோ?

என்னேயுன் செம்மை
இருந்தவா றென் ஓர்ப்புத்
தன்னைத் தகர்த்திடவா
தத்தளித்துக் காட்டுகிருய்?
உன்னே யணைய அலை
ஒலியா லுலகளக்கும்
என்னைத் தடுக்காதே
இன்னும் சிலகற்க,

ஓங்கு புகழ் ஆங்கில வா
னொலி நிலையஞ் செல்கின்றேன்,
ஆங்கவர்கள் பாங்கு செறி
ஆகாச வாணி முறை
தீங்ககற்றி நானறிந் தென்
தேசத் தொலி பரப்பத்
தேங்கு'சுவெஸ்' கால்வாய் நீ
தேற்றி யெனைச் செல்ல விடு.

வித்திட்டு நாகரிகம்
விளைத்த பிரதேச
மத்தித் தரைக் கடலே
மாண்பு மிக வுடையாய்;
கத்திக் குதிக்காதென்
காயந் தகிக்காதுன்
சித்தக் குளிர்மையிலென்
சிந்தை குளிர்கிறதே.

கன்னித் தமிழ் நூல்கள்
கவ்விச் சுவைத்ததறுற்
கன்னற் றமிழ் பேசக்
கடலேநீ கற்றிருப்பாய்;
நன்னித் தில ஈழ
நண்பர்க் கெனதாசி
பன்னிப் படரந்தப்
பக்கத்தாற் போதையிலே.

# லண்டனிலே.

மோனக் கருமுகில்கள் மூடிக் கிடக்கின்ற
வானத் திரையிடையே வருடத் தொருசிலநாள்
தீனக் கதிர்பரப்புந் திங்களொளிச் சூரியனைக்
காணக் கிடைக்கி (ல்)லண்டன் காமன் விழாவெடுக்கும்.

சோலை வனங்களெலாம் சோடிப் படலங்கள்
சாலை சதுக்கமெலாம் சதுரிதழை ஒன்றுக்கி,
காலை முதலிங்கு கட்டிப் புரள்கையிலே
மாலை, கடல்,மதியம் மட்டா எனைவாட்டும்?

உள்ள தெதுவும் ஒளிக்கத் தெரியாத
வெள்ளை மகளிர்செயல் வேகும் உளத்திற்குக்
கொள்ளி யிடும்,அந்தக் கொடுமை சகிக்காது
துள்ளி விழுமுள்ளம் தொடுகடலுக் கப்பாலே.

ஓடும் புகைவண்டி உயரத் ததன்கீழே
நீடுங் கடைவீதி, நிறையுஞ் சனம்,அதன்கீழ்
ஓடும் நதி,அதன்கீழ் ஓடும் புகைவண்டி,
ஓடும் நகர் முழுதும், ஓடும் உளமொருபால்.

'தேம்ஸ்' நதியின் வெள்ளத்தே தேங்குங் கலங்களவை
தாம் பிறவூர்ச் செல்வங்கள் தாங்கிவரும், லண்டனினைப்
பூம்புகழூ ராக்கிப் பொலிவிக்கும், என்னுளத்தைக்
கூம்புவிக்கு மென் செல்வம் கொண்டு குவிக்காமல்.

எண்டிசையு மொன்ரு யியைந்து மயங்குகிற
லண்ட(ன்)நகர் மாளிகையின் அண்டை யிருந்தாலும்,
வண்டறியா இன்கமழ்சேர் வார்கூந்தல் மெல்லணையிற்
கண்டறியேன் நன்ருய காசினியி லொன்றேனும்.

'மேற்குக் கிழக்கொடினி மேவா' தெனவுரைத்த
வாக்கென்ன 'கிப்ளிங்'நீ வருவதறி யாதுரைத்தாய்;
மேற்கோ கிழக்கொடுமெய் மேவிக் கலந்திங்கு
பாற்கோப்பி போலப் படர்கிறதைப் பார்க்கையிலே,

மேற்குக் கிழக்காகும், மேலான கீழாகும்,
தோற்குள்ள பேதம் தொலைந்து பிறிதாகி,
ஆர்க்குந் தெரியாமல் அவனி உருமாறப்
பார்க்கு மென லண்டன் பாடந் தருகிறது.

## 'உவெஸ்மிஸ்ரர்' பாலத்தே.

பேரான லண்டனிலே
பெரியார்கள் கூடுகிற
பாராளு மன்றத்தோர்
பக்கத்தா லோடுந் 'தேம்ஸ்'
பேராற்று 'உவெஸ்மிஸ்ரர்ப்'
பெரும்பாலத் தேநின்று
தீரா உழைப்பின்
திறமைகளைக் காண்கின்றேன்.

காலைக் கதிராற்
கலைக்க முடியாத
பாலைத் திரைத்தன்ன
பனிப்படலத் தூடாலே
மாலைத் தொடராய்
மயங்கித் தெரிகின்ற
கோலப் பெருமாடக்
கோபுரங்கள் எத்தனையோ!

மக்கள் அரசாட்சி
மன்றத்துக் கோபுரங்கள்
நெக்குருகு விக்குமெனை;
நீதி நிலைப்பதற்குத்
தக்க தெனக் கொண்ட
ஜனநா யகநங்கை
புக்ககத்தைக் கண்டேன்
புளகாங் கிதங்கொண்டேன்!

ஒருநூறு வருடங்கள்
ஓயா துழைப்பினுமுள்
உருவே திரியாரிவ்
வுலகிற் பெரியரெனப்
பெரு 'பென்' மணிக்கூடு
பேசும் மணிக் கொருகால்
அருகிருந்து பாராளு
மவர்க்கு மெவர்க்குமெலாம்.

அங்கே சிலையாய்
அசையாமல் நிற்கின்ற
மங்கை யவளா 'ரோம்'
மாற்றும் தமையெதிர்த்துப்
பொங்கி யெழுந்த
'பொடீசியா'? இங்கடிமைச்
சங்கடத்தைத் தீர்த்த
சமர்த் தவள்பேர் வாழியவே!

# உலகம் உவப்ப ஒலிபரப்புகையில்.....

கற்புக் கரசி கண்ணகியாள்
காலின் சிலம்புக் கதையினை, யென்
சொற்புக் குணர்த்து மிடமெல்லாம்
சொல்லு மொலியைப் பரப்புகையில்,
மற்புக் குயர்ந்து தமிழ்வளர்த்த
மாறன் குலத்தைச் சபித்தெங்கள்
பொற்புத் தமிழின் காவலனைப்
பூண்டோ டழித்தா ளெனநோவேன்.

கம்பன் கவிதை வளமெல்லாம்
காற்றின் வழிநான் பரப்புகையிற்
செம்பொன் மணியிற் சிறந்தெனுயிர்
செழிக்குந் தமிழை வளர்த்தெழிலார்
இம்பர்க் கமுத மளித்தபெரும்
இகல்வெல் வளவன் குலத்தைச் சொல்
அம்புக் கிரையாய் அழித்தானென்
றலமந் துள்ளங் கலங்கிடுவேன்.

*　　*　　*

உலக முவப்ப ஒலிபரப் புகையிற்
கலகம் எனக்குட் பிறப்பது காண்பேன்;

தமிழால் வளர்ந்த தையலர் கற்பும்
தமிழால் வளர்ந்த தகையோர் கவியும்
அழியாத் தமிழின் அருங்கா வலரைப்
பழிவாங் கியஅப் பாவத் தாலே,
கலைகள் பலவாய்க் ககனத் திடையே
அலையாய்த் தமிழில் அனுப்பும் போது
தலையாந் தமிழின் தகைமை பேசாச்
சிலையாய் நின்னுட் சிதைவேன் சிதைவேன்.

அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றுவதை
உரைசெயச் சிலம்பின் ஒருகதை கொண்டு
விவரணச் சித்திரம் இசையொடு தரவே
தவலரு முயற்சி தலைப்படு கையிலே,
"நிலமிசை யின்றதை நினைவு படுத்தச்
சிலம்பேன் கதையேன் செயல்போ தாதா?
கொல்லன் தெருவிலே னூசிவிற் பனை"யென்
றெல்லும் வகையெலா முறுத்துமென் நெஞ்சே.

'முற்பகல் பிறர்க்கே மூட்டிய கொடுமை
பிற்பகல் தமக்கே பெயர்ந்திடு' மென்று
செப்பிடக் குறளைச் சிந்தனை செய்தால்,
இப்பகல் கண்முன் இலங்குவ தொழித்து
ஏட்டினிற் குறளாய்த் தீட்டிய மேற்கோள்
காட்டுவ தேனென வாட்டுமென் மனமே.

உலக முவப்ப ஒலிபரப் புகையிற்
கலகம் எனக்குட் கணப்பொழு தொன்றாய்ப்
பிறப்பது காண்பீர்; பெரும்பான் மையினர்
சிறப்புற வேண்டின் சிறுபான் மையரைக்
களிப்புற வைத்துக் கவின்பெறு நலனை
அளிக்குங் கொள்கை அனுசரி யாத
கொடுங்கோ லாட்சிக் குடியர சென்னச்
சுடுமென் நெஞ்சம் சுடுமப் போதே.

* * *

சொல்லார் மதுரைத் திருநகரும்
சோபை நிறைநின் திருமுலையும்
எல்லா மெரித்துக் கண்ணகிநீ
எமக்கே கொடுமை விளைத்திட்டாய்!
வல்லார் கவியி லென்றிங்கே
வாழ்வார் தமையா தரிப்பார்கள்
இல்லா வகைநீ செய்தேயெம்
ஏழ்மை பெருக்கி விட்டாயே!

* * *

மையார் தடங்கண்ணி மானேயுன் கற்பு மகிமையினல்
உய்யா விழுமநீ ஊட்டிய எங்குல முய்வதற்குன் [கள்
பொய்யாத சாபமும் போகாத தாபமும் போக்கியெங்
கையா றறுத்தல் கடனுனக் கேசெய்ய கண்ணகியே.

மட்டுப் படாத பொருளே பொதிந்து மலிந்துசுவை
சொட்டுந் தமிழை வளர்த்திட்ட சோழரையுன் சொல்வலி
சுட்டுக் கெடுத்துச் சுகமென்ன கம்பநீ சூடினையோ? [யால்
தட்டுத் தடுமாற வைத்தெம்மை யிங்குநீ தாழ்த்தினையே!

தூண்டுந் துயரைத் துடைத்தெம்மை யாட்கொண்டு
[தொல்லுலகில்
மீண்டுந் தமிழை வளர்க்க வளவரிம் மேதினியில்
யாண்டு முதித்துக் குதித்துப் புலவோர்கள் ஆர்ப்பரிக்க,
வேண்டுங் கவியர சேஉன்றன் சாப விமோசனமே.

# பொங்கல்.

பொங்கிட வேண்டும் உள்ளம் — பூரித்துப்
பொங்கிட வேண்டும் உள்ளம்

மங்கல மானதைப் பொங்கலைப் போலமெய்
எங்கும் பரந்துசுவை தங்கி நிறைந்துநிதம் (பொங்கிட)

தங்கத் தமிழ்ப்பயிரும் எங்கள் குலத்துயிரும்
பொங்கப் பிறந்ததுதை பொங்கப் பிறந்ததென்று
சங்கம் வழங்கமிரு தங்கம் முழங்கஇசை
வங்க மெறிகடலும் மங்க ஒலித்துடலுள் (பொங்கிட)

செல்வரும் சீமான்களும் சிங்காரப் பெண்மணிகள்
எல்லாரும் இன்தமிழ்நெல் ஏத்தி வளர்க்கவந்தார்
சொல்லாரும் சுவைநின்று சொட்டும் தமிழின்பொங்கல்
அல்லாமல் உண்ணேமென்று ஆணைகள் செய்தேயின்று
[ (பொங்கிட)